ஏனைய ஸ்தலங்கள்

அத்திப்பட்டு முதல் க்ஷேத்திரக்கோவை வரை

பாடல்கள் - 203-322 & 503

எண்	பாடல்	எண்	பாடல்
	அத்திப்பட்டு		கந்தனகுடி
203	கருதியறிவகல	214	எநதன் சடல
	அவிநாசி		கருவூர்
204	இறவாமற	215	தசையாகிய
205	மனத்திரைந்	216	நித்தப்பிணி
	ஆய்க்குடி	217	மதியால விதத்த
206	வாட்பட		காசி
	இராமேசுரம்	218	தாரணிக கதி
207	வாலவயதாகி	219	வேழமுணட
	உத்தரமேரூர்		கும்பகோணம்
208	கருதி மறைக	220	கருத்த குஞ்சி
209	தோலெலும்பு	221	செனிததிருக
	எட்டிகுடி		கூந்தலூர்
210	ஒருகு மைம்பு	222	தரையினில்
	எண்கண		கோடிநகர
211	சந்தனந	223	நீல முகிலான
	எழுகரைநாடு		கோடைநகர
212	விரகற நோககி	224	ஆதிமுதலுனி
	கந்தனூர்	225	சாலநெடுநாள
213	விந்து பேதித்த	226	ஞாலமெஙகு
		227	தோழமை கொண

எண்	பாடல்
	சிக்கல்
228	புலவரை ரக்ஷிக்கும
	சிவபுரம்
229	மனமெனும் பொருள்
	சிறுவை
230	அண்டர் பதி
231	சீதள வாரிஜ
232	பிறவியான சட
	சீகாழி
233	ஊனத்தசை
234	சருவியிகழ்ந்து
235	தினமணி சார்ங்க
236	பூமாதுரமே
	சேலம்
237	பரிவுறு நாரற
	சோமநாதன மடம்
238	உருவழிபடாது
	சோமீசுரம்
239	உரிய தவநெறி
	தனிச்சயம்
240	உரைத்த சம்ப்ரம

எண்	பாடல்
	திருகடவூர
241	ஏட்டின விதிப்
	திருக்குடவாயில்
242	சுருதியாயியவா
	திருக்கரங்காடுதுறை
243	அலங்கார முடி
	திருக்குற்றாலம்
244	வேதத்திற்
	திருச்செங்காட்டங்குடி
245	வங்கார மார்பி
	திருநள்ளாறு
246	பச்சை யொண்
	திருநாகேச்சுரம்
247	ஆசார வீனக
	திருநெல்வாயில்
248	அறிவிலாதவ
	திருப்பந்தணைநல்லூர
249	இருவினையஞ்ச வருவினை
	திருப்பாதிரிப்புலியூர்
250	நிணமொடு குருதி

எண்	பாடல்
	திருப்பாண்டிக்கொடுமுடி
251	இருவினை பிறவி
	திருப்புக்கொளியூர்
252	பக்குவ ஆசார
	திருப்பெருந்துறை
253	இரத்தமுரு
	திருப்போரூர்
254	திமிர மாமன
	திருமயிலை
255	அமரு மமராரி
256	அறமிலா அதி
257	இகல வருதிரை
258	கடிய வேக மாருத
259	திரை வார
	திருமாந்துறை
260	ஆங்குடல் வளை
	திருமுருகன்பூண்டி
261	அவசியமுன
	திருவக்கரை
262	கலகலென
	திருவலிதாயம்
263	மருமலவியார
	திருவாஞ்சியம்
264	இபமாந்தர்
	திருவாடானை
265	உனருரும் உட
	திருவாரூர்
266	நீதான் எத்தனை
267	பாலோதேனோ பல
268	பாலோ தேனோ பாகோ
	திருவானமியூர்
269	குசமாகி யாரு
	திருவிடைக்கழி
270	பகரு முத்தமிழ
271	படி புனல் நெருப்பு
272	பழியுறு சட்டக
273	மருக்குவாவிய
	திருவீழிமிழலை
274	எருவாய கருவாய்
	திருவேதசமாக்கூடல
275	வண்டு போற்

எண்	பாடல்	எண்	பாடல்
	திருவேடகளம்		பாகை
276	சதுரத்தரை	288	ஈளகரம
277	மாத்திரையா		புனவாயில
	திருவேறகாடு	289	உரையுரு சென்றது
278	கார்ச்சார		பெருங்குடி
	திருவொற்றியூர	290	தவங்களில
279	சொருபப பிர		பேரூர்
	திருவோத்தூர	291	தீராப பிணி
280	தவர்வாட்		மதுராந்தகம்
	திலதைப பதி	292	குதிபாய்ந்தி
281	கிறையத்தனெ	293	சயிலாங்கனெ
	தேவனூர்		மதுரை
282	அருமாறு மருக	294	ஆனமுகவற்கு
283	காலினைதது	295	கல மேவு ஞான
284	தாரகாசுரன	296	நீதத்துவமாகி
	நாகபட்டினம	297	பரவு நெருங்கு கதி
285	துவமிடடினர		மாயாபுரி
286	விருதா தெனவே	298	சிகரமருநத
	நிம்பபுரம்		வடதிருமுல்லை வாயில்
287	அருசு வித பூத	299	அணி செவ்வியார்

ஏனைய ஸ்தலங்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
	வடுகூர		வெள்ளிகரம்
300	அரிய யயன	312	அடலரி மகவு
	வயலூர்	313	இலலை யெனு
301	அரிமருகோனே	314	சிகரிகளிடிய
302	எனைஅவ பிறகக	315	வதன சரோருக
303	குருதி கிருமிகள		வேதாரணியம்
304	தாமரையின	316	ஆமம வினைக்கட
	வயிரவி வனம்		வேப்பூர
305	அருவரை யெடு	317	குரைகடலுல
	வாலிகொண்டபுரம்		வைத்தீசுரன் கோயில்
306	ஈயெறும்பு நரி	318	உரத்துறை
	விஜயபுரம	319	எத்தனை கோடி
307	குடல நிணமெனபு புலால	320	மாலினை வெருத்த
	விரிஞ்சிபுரம்		ஸ்ரீமுஷ்டம்
308	நிகரில பஞ்ச	321	கழை முதது
309	மருவு மஞ்சு		க்ஷேத்திரக் கோவை
	விருத்தாசலம்	322	கும்பகோணமொ
310	திருமொழி		
311	பசையுறற		மதுரை
		503	முத்து நவரத்ன

கரித்து மணடையில் உதிரம் அருந்தத

திரட் பருந்துகள் குடர்கள் பிடுங்கத்

தருக்கு சம்புகள் நிணமது தித்தப் பொரும் வேலா

தடக சிகண்டியில, வயலியில், அணையப்

படைத்த நெருஞ்சினில் இயல் செறி கொங்கிற்

தணிச்சயம் தனில் கினிதுறை கந்தப் பெருமாளே.

திருக்கடவூர் 241

(241) பைரவி (6) (-1/2) ஆதி - 2 களை

ஏடுடின் விதிபபடியே கொக மாபுர

வீட்டில் அடைத(து) இசைவே கசை முணதில்

ஏற்றி அடித்திடவே கடல் ஓடமது என ஏதி

ஏற்கும் எனப், பொருளதை பெணதை, கொ

ளாத்,து எனத் திரியா பரியா, தவம

ஏற்றி, இருப்பிடமே அறியாமலும உடல் பேணிப்

பூடுகு சரப்பளியே மதனும என

ஆட்டி அசைத (து) இயலே திரி நாளையில்

பூதத மலக் குகையோ பொதி சோறென கழு காகம்

போற்றி நமக்கு இரையாம எனவே கொள,

நாட்டில லொடுக்கெனவே விழு போதினில,

பூடுகு பணிப் பதமா மயிலா, அருள புரிவாயே

வீட்டில் அடைதது எரியே இடு பாதகன

நாட டை விடுததிடவே பல ததினில

வீழ்தத விதிப்படியே குரு காவலா வனமே போய

மண்டை ஓட்டை எடுத்து ஏந்தி அதில் ரத்தத்தைப் பிடித்துப் (40)
பருக, கூட்டமான பருந்துகள் குடல்களைப் பிடுங்க, களிப்புறும் நரிகள் தாம் உண்ணும் மாமிசத்தைச் சிந்திச் சிதற போர் செய்த வேலனே.
(குடம்) பெருமை வாய்ந்த மயில் மீதும், வயலூரிலும், அன்பு பொருந்தியுள்ள அடியார்களின் நெஞ்சத்தும், தகுதி நிறைவுற்ற கொங்கு நாட்டில் தனிச்சயம் என்னும் தலத்திலும் இன்பத்துடன் உறையும் கந்தப் பெருமாளே.

திருக்கடவூர் 241

(241) பிரமனது ஏட்டில் கண்ட விதியின் பிரகாரம் (இந்த உயிரை) கொண்டு போய் நலல (புறம்) உடலாகிய ஒரு வீட்டிலே சேர்த்துப் பொருந்தவே, அடைக்கும் சுவக்குப் போன்ற மூன்று (இடை, பிங்கலை, சுழுமுனை) என்னும் நாடிகளை அதில் பொருத்தி, அடைத்துச் செலுத்தக், கடலில் படகு செல்வது போலக் காலம் கழித்து, நல்லதென்று பொருளாசை பெண்ணாசை கொண்டு, தூ தூ என்று பலர் இகழத் திரிந்தும் வருந்தியும், தவம் சேர்ந்துள்ள இருப்பிடம் இன்னதென்றே அறியாமலும் இவ்வுடலை விரும்பிப் பாதுகாத்து

பூட்டப்பட்ட சரப்பளியே (வயிரமிழைத்த கழுத்தணி) விளங்க மன்மதன் இவன என்னும்படி ஆட்டியும், அசைத்தும், ஒய்யாரமாகத் திரிகின்ற காலத்தில், இரும்பின மலர் சோர்ந்த குகையோ இது, பொதி சோறோ இது என்று கழுகும், காகமும் விரும்பி இவ்வுடல் நமக்கு இரையாம் என்று கொள்ளும்படி, பூமியில் பொத்தென்று விழுகின்ற அச்சமயத்தில், அழுத்திக் கட்டி வைத்துள்ள பாம்பைக் காலிற் கொண்ட அழகிய மயிலனே! அருள் புரிவாயாக -

அரக்கு மாளிகையில் இருக்கச் செய்து எரியிட்ட பாதகனும் துரியோதனனுடைய நாட்டை விட்டுப் போகும்படி பல சூதாட்டங்களில் ஏற்பட்ட விதிப்பிரகாரம் குருகுலத்து அரசராம் (ஐவரும்) காட்டுக்குப் போய்

வேறுமை உற்று (உ)ருவோடு இயல் நாளது
பார்த்து, முடித்திடவே, ஒரு பாரதம்
மேற் புனைவித்த, மகா வீர மாயவன் மருகோனே
கோட்டை அழித்து அசுரார பதி கோரனை
மூட்டி எரித்த பராபர சேகர
கோத்த மணிக் கதிரே நிகராகிய வடிவேலா
கூற்று மரித்திடவே உதை பார்வதி
யார்க்கும அளித்த பெருகிய மாண்மகள்
கோட்டு முலைக்கு அதிபா. கடவூர் உறை பெருமானே

242

திருக்குட வாயில்

(242) தூர்கா (7½) (6½+2+4)

சுருதியாய், இயலாய் இயல் நீடிய
தொகுதியாய, பெகுவாய, பெகுபாவை கொள்
தொடர்புமாய் அடியாய் நடுவாய் மிகு துணையாய் மேல்
துறவுமாய் அறமாய் நெறியாய் மிகு
விரிவுமாய் வினைவாய் அருள் ஞானிகள்
சுகமுமாய முகிலாய மழையாய் எழு சுடர்வீசும்
பருதியாய், மதியாய், நிறை தாரகை
பலவுமாய, வெளியாய், தனியாய், எழு
பகல் இராவு இலையாய, நிலையாய மிகு பரம் ஆகும்
பரம மாயையின நேர்மையை யாவரும்
அறியொணாததை நீ குருவாய் இது
பகருமாறு செய்தாய் முதல் நாளுறு பயனேதான்

(41)

வேறு வேடம் பூண்டு அஞ்ஞாதவாசம் செய்திருந்த நாளின் முடிவு பாரதத்து அந்த நாள் முடிந்திடவே. (அல்லது) நூறு வரை முடித்திடவே, ஒரு பாரத யுத்தத்தை மேலே நடக்கும்படிச் செய்த மகா வீர மாயவன் திருமால் மருகனே. (சூரனது) மகேந்திரபுரியின் கோட்டைகளை அழித்து, அசுரர் தலைவனை சூரன் 'கோ' என்று அலற, அவனது நகரத்தை நெருப்பு மூட்டி எரித்த பராபரப் பொருளே! அழகனே! கோக்கப்பட்ட ரத்ன மணிக்கு நிகரான கூரிய வேலனே! யமனை இறந்து போம்படி உதைத்த பார்வதி தேவிக்கு இனிமை தரும் பெண்ணாகிய மான் மகள் வள்ளியின் மலையன்ன கொங்கைக்கு உரிய தலைவனே! திருக்கடவூரில் வீற்றிருக்கும் பெருமானே!

திருக்குடவாயில் 242

(42) வேதமாம், ஆகமமாய, அத்தகைய ஆகமங்களின் மிக்குள்ளதான பகுதியாய், பலவுமாய், அநேகம் (பாஷைகளில்) மொழிகளில் கொள்ளப்பட்ட சம்பந்தத்தை உடையதாய், அடிப்படையாய், நடுவாய், மிக்க துணையாய்ப் பின்னும்

எல்லாவற்றையும் விட்ட நிலையதாய், தருமமாய், நல்லொழுக்க வழியாய், மிகுந்த விரிவு உடையதாய, வினவும் பொருளாய், அருள் நிரம்பிய ஞானிகள் அனுபவிக்கும் சுகப் பொருளாய், மேகமாய், மழையாய. எழு வகைச் சுடர்களை சூரியனாய், சந்திரனாய், நிறைந்துள்ள நக்ஷத்திரங்கள் பலவுமாய், ஆகாய (விசும்) வெளியாய், சோதியாய், உண்டாகின்ற பகலும் இரவும் இல்லாததாய், நிலைத்துள்ளதாய் உள்ள, மிக்க மேலான பொருளான

மகா மாயையின் உண்மைத் தத்துவத்தை (நிலையை), எவரும் அறிய முடியாததை நீ குருவாய் வந்து -அதை- இங்ஙனம் (உலகுக்கு) எடுத்து ஓதுமாறு (எனக்குத்) திருவருள் புரிந்தாய்! இந்த பாக்கியம் நான் முற்பிறவிகளில் செய்த தவத்தின் பயன் தானே

கருதும் ஆறிரு தோள் மயில் வேல் கிளை
கருதொணு வகையோர் அரசாய் வரு
கவுணியோர் குல வேதியனாய் உமை தன பாரக்

களப பூண் முலை ஊறிய பால் உணும்
மதலையாய் மிகு பாடலின் மீறிய
கவிஞனாய் விளையாடிடும் வாதிகள் கழு வேறக்

குருதி ஆறெழ, வீதியெலா மலர்
நிறைவதாய் விட, நீறிடவே செய்து,
கொடிய மாறன மெய் கூன் நிமிரா, முனை குலையா, வான்

குடி புகீர் என, மா மதுரா புரி
இயலை ஆரண ஊரென நேர் செய்து,
குடந்தை மா நகர வாழ்வுற மேவிய பெருமாளே.

திருக்குரங்காடுதுறை 243

(243) பாகேபரீ (3) (+) /3

அலங்கார முடிக், கிரண(ம்) திரண்டு ஆறு முகத்து அழகிற
அசைந்து ஆடு குழைக் கவசத், திரள் தோளும

அலம் தாமம், மணித்திரள் பூரணடு ஆடு நிரைத்த கரத்து
அணிந்த ஆழி வனைக கடகச் சுடர் வேலும்

யாவரும் கருதிப்போற்றும் பன்னிரு தோள்கள், மயில்,வேல் இவை (42)
தமை, எவரும் கண்டு கருதா வகையில(மறைத்து), காழிப்பதி அரசாக
வந்த கவுணிய குலத்தினுட் சிறந்த வேதியனாய உமையின் மிக்க பாரமான
கலசவ சாந்து அணிந்த கொங்கையில் ஊறின பால் உண்ட குழந்தை
யாய், மிக்க பாடல்கள் பாடுவதில் எவரினும் மேம்பட்ட கவிஞனாய்த்
திருவிளையாடல்கள் செய்திருந்த சமயத்தில், வீண வாதுக்கு வந்த
சமணர்கள கழுவிலேறவும் (அவாகள்)
ரத்தம் அருகப் பெருகவும், வீதிகளில் எல்லாம் பூ மாரி நிறைந்திடவும்,
திருநீற்றை யாவரும இடும்படியாகச் செய்து. கொடிய - மனக்கோட்டம்
கொண்டிருந்த - செம்மை நெறி விளவு படச் சமண மார்க்கத்திலிருந்த-
பாண்டியனுடைய கூன்பட்ட உடல் நிமிர்ந்து விளங்கவும், முனை (சமண்)பகையை
குலைத்து - அழித்து, வானில் (பொன்னுலகில்)
குடி புகுவீர்களாக எனச் சிறந்த மதுரைப் பட்டினத்தின் நிலையை மாற்றி
வேத புரி என்னும்படியாக அந்த ஊரை நேர்மையான செந்நெறியிற
சேர்ப்பித்துத. திருக்குடவாயில் என்னும் பெரிய நகரத்தில வாழ்வு
கொண்டு வீற்றிருக்கும் பெருமானே

திருக்குரங்காடுதுறை 243

(243)

அலங்காரமான கிரீடம் . தனி திரண்டுள்ள ஆறுமுகங்களிலும் அழகுடன்
அசைந்தாடுகின்ற குழைகள், கவசம், திரண்ட தோள்களின் மேல்
திருவதி தரும்படியான பூ மாலைகள, ரதனமணிக் கூட்ட மாலைகள், புரணபாமே
வரிசையாய் அமைந்தனவும, திருக்கரங்களில அணியப்பட்டனவுமான மோதிரம்
புனைந்துள்ள வீர கடகம், தனி வீசும வேல

சிலம்போடு மணிச் சுருதிச சலங்கை ஓசை மிகுத்து அதிர

சிவத்து ஏறி மணத்த மலர்ப புனை பாதம

திமிந் தோதி திமித் திமித்த தனந் தான தனத் தனத்

திரை தோறு நடிபபது மற் புகல்வோனே

இலங்கேசர் வனத்துள் வனக் குரங்கு ஏவி, அழற் புகை இட்டு,

இளம தாது மலர்த் திருவைச சிறை மீளும்

இளம் காள முகிற், கடுமைச் சரம கோடு கரத்தில் எடுதது

இரும் காணம் நடக்கும் அவற்கு இனியோனே

குலம கோடு படைத்(த) அசுரர் பெருத சேனை அழிக்க முனை

கொடுந் தாரை வெயிற(கு) அயிலை தொடும் வீரா

கொழும் காவின மலர்ப பொழிலிற கரும்பு ஆலை புணரக்கும் இசை

குரங்காடு துறைக் குமரப பெருமானே

திருக்குறுலம் 244

244 மந்தகனி (7) (-) 1300

வேதத்திற் கேளவி இலாதது

போதத்திற காண ஒணாதது

வீசத்திற் தூரம் இலாதது கதியானா

சிலம்புடன் அழகிய வேத ஒலி காட்டும் சதங்கை - இவைகள் நாதம் மிகுந்த ஒலி செய்ய, செந்நிறம் மிக்கு நறுமணம் வீசும் மலர் புனைந்த திருவடிகள், திமிந்தோதி திமித்திமித் தனநதான தனத் தனன! என்ற தாள ஒத்துடன் இடையறாது நீ நடனம் செய்யும் அழகு - ஆக இவைகளை எல்லாம் (மன்) நன்கு - நிரம்ப - நான் சொல்லித் துதிக்க மாட்டேனோ

இலங்கையை ஆளும் ராவணனுடைய அசோக வனத்தில், காட்டில் வாழும் குரங்கை (அநுமானை) அனுப்பி, அவரால் நெருப்பின் புகையைக் கிளம்ப வைத்து மென்மையான மகரந்தப் பொடியைக் கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் லக்ஷ்மியாம் சீதையின் சிறையை மீட்ட

இளமை பொருந்திய, கரிய மேக நிறம் கொண்ட, கொடிதான அம்பையும் (கோடு) வளைந்த வில்லையும் கையில் எடுத்துக் கொண்டு, இருண்ட பெரிய காட்டில் நடந்த ஸ்ரீ ராமருக்கு - திருமாலுக்கு - உகந்தவனே!

கூட்டமான இந்த தாரையும், கொடுமையையும் கொண்ட அசுரர்களின் பெரிய சேனையை அழிக்கப் போர் முனையில் கொடியதும், கூர்மை உடையதும், ஒளித்துப் பேர் போனதுமான வேலாயுதத்தைப் பிரயோகித்த வீரனே!

செழிப்புள்ள சோலைகளிலும், பூஞ்சோலைகளிலும் கரும்பு ஆலைகள் வேலை செய்யும் ஒலி கேட்கும் குராவடிக்காட்டுத் துறையில் எழுந்தருளியுள்ள குமரப் பெருமானே

4

திருககுற்றலம் 244

(44)

வேதங்களிலே ஆராயப் படாதது, அறிவு கொண்டு காண முடியாதது வீசும் தாரம் கூட இல்லாதது (நமது ஆன்மாவுடன் ஒன்று பட்டிருப்பது) நற்கதியடைய விரும்புவோர்

விதித்துத் தேட அரிதானது
ஆதித்தற் காய உறைந்து
வேகத்துத் தீயில் வேகாதது — சுடர் தானம்
வாதத்துக்கே அழியாதது,
காதத்திற் பூ இயலானது
வாசத்திற், பேரொளியானது — மதம் உறும்
மாயத்திற் காய மதாசல
தீதர்க்குத் தாரம் அது ஆகிய
வாழ்வைத், சற்காரமதா இனி — அருள்வாயே

கா தத்தில் காயம் அது ஆகும், அ
தீ திக்தித் தீது இது தீது என
காதற் படடு நீதியுமே விடு — கதி, காணே

காணப்பட்டே, கொடுநோய் கொடு
வாதைப்பட்டே மதி தீது அக
யாமற் கெடட்டே தருமாறிட — அருவோனே
கோதைப் பித்தாய் உரு வேடுவ
ரூபைப் பெற்றே வன வேடுவர்
கூடத்துக்கே குடியாய் வரு — முருகோனே
கோது இல் பத்தாரொடு, மா தவ
சீலச சித்தாதியார் சூழ் தரு
கோலக் குற்றாலம் உலாவிய — பெருமானே

பகுத்து ஆராய்ந்து தேடுதற்கு முடியாதது; சூரியனால் காய முடியாதது; (கானம் சுடா) காட்டு நெருப்பின் (வேகத்துத் தீயில்) கடுமை கொண்ட தீயிலும் வேகாதது

காற்றினால் தன் ஒளி அழிந்து போகாதது; (வாசத்திற்) நறுமணம் வீசுவதில் அருகாத தாரம் (மைமல்) மணம் வீசும் மலரைப் போன்றது பெரிய ஜோதியாய் விளங்குவது; ஆணவ மதம் ஊறுகின்ற

மாயம் பொருந்திய (இந்த) காயம் - உடலில் (மத சலம்) ஆணவம் என்னும் மதநீர் உள்ள குற்றம் வாய்ந்தவர்களுக்கு எட்ட முடியாத தூரத்தில் இருப்பது -ஆன- இத்தகைய பெருவாழ்வை. -உபசாரமாக- அடியேனை மதித்துப் பொருட்படுத்தி இனி அருளுவாயாக ·

(சததில்) இந்த ஆபத்தான நிலையில் (கா) காப்பாற்றுங்கள், (காயம் அது ஆகும்) உடலாகின்ற. அ-அந்த, (தீ) சுர வெப்பம் நிறைந்த தொல்லை துன்பம் தருவது துன்பம் தருவது என்று (சமண ரோக்கள் மாருடன்) கூன் பாண்டியன் அன்பு வைத்து கூறியுமே (முறையிட்டும்) கூட (விகதி) அந்தச் சுரம் விட்டு நீங்கும் வழியைக் காணாதவர்களான சமண குருக்கள் மார்

யாவரும் காணும்படியே - கழுமுனையில் மிக்க நோய் கொண்டு வேதனைப் பட்டே தங்களுடைய அறிவின் தீமை (ஈனம்) நீங்காமலே கெட்டுத் தடுமாறி அழியும்படி அவர்களை (சம்பந்தராக வந்து) அழித்தவனே!

பெண் (வள்ளி பிராட்டி) மேல் பித்து (அன்பு) கொண்டு, ஒப்பற்ற வேட உருவம் தாங்கி, வன வேடர்கள் கூட்டத்தினிலே - வீட்டுக்கே குடியாக வந்த முருகனே!

குறைமற்ற பக்தர்களுடனே சிறந்த தவம் ஒழுக்கம் வாய்ந்த சித்தர் முதலானோர் வந்து வலம் வரும் அழகிய குற்றாலம் என்னும் தலத்தில் உலாவும் பெருமாளே!

திருச்செங்காட்டங்குடி 245

ஸிந்து பைரவி (35) (வ) /4/4/40 கண்டநடை

வங்கார, மார்பில் அணி, தாரொடு உயர கோடு அசைய
கொந்தார மாலை குழல் ஆரமொடு தோள் புரள,
வண் காதில் ஓலை கதிர் போல ஒளி வீச, இதழ் மலர் போல
மருசு ஆடு சாப நுதல், வான் அனைய வேல் விழிகள்,
கொஞ்சார மோக கிளியாக நகை பேசியுற
வந்தாரை வாரும் இரும் நீர் உறவெனும் ஆசைமயல் இடுமாதர்

சங்காளர், சூது, கொலைகாரர். குடிகேடர், சுழல்,
சிங்கார தோளர். பண ஆசையுளர். சாதியிலர்
சண்டாளர் சீசி அவா மாய வலையோடு அடியென உழலாமல்
சங்கோதை நாதமொடு கூடி, வெகு மாயை இருள்
வெந்து ஓட, மூல அழல் வீச, உபதேசமது
தண் காதில் ஓதி இரு பாதமலர் சேர அருள புரிவாயே

சிங்கார ரூப மயில் வாகன நமோ நம என
கந்தா குமார சிவ தேசிக நமோ நம என
சிந்தூர பார்வதி சுத ஆகர நமோ நம என விருதோதை
சிந்தாத சோதி கதிர் வேலவ நமோ நம என
கங்காள வேணி குருவானவ நமோ நம என
திண் சூரர் ஆழி மலை தூள்பட வை வேலை விடு முருகோனே

(45) மார்பில் அணிந்துள்ள (வங்கார தார்) பொன் மாலையுடனே, மேலான மலையன்ன கொங்கைகள் அசைய. பூங்கொத்துக்கள் நிறைந்த மாலையணிந்துள்ள கூந்தலும் (ஹாரம்) மணி மாலையும் தோளிற் புரண்டசைய, வளப்பம் உள்ள காதிலே ...ந்த (காதணி) சூரியன் போல ஒளி வீச, வாயிதழ் (குமுத) மலர் போல விளங்க மேகத்தின வான வில் போன்ற நெற்றி, வாள் வேல் அனைய விழிகள், கொஞ்சுதல் மிக நிறைந்த ஆசைக் கிளி போன்று சிரிப்பு மொழிகளைப் பேசித் தம்மை நண்ணி வந்தவர்களை 'வாரும், இரும், நீர் நமக்கு உறவினராயிற்றே' என்றெல்லாம் ஆசை மயக்கத்தை ஊட்டுகின்ற (போது) மாதர்கள்

கூடிக் களிப்பவர்கள், வஞ்சகர், கொலைகாரர், குடி கெடுப்பவர், திரிகின்றவர் அலங்கார தோளினர், பண ஆசை உள்ளவர், சாதி பேதம் கவனிக்காதவர், சண்டாளர்கள், சீசீ இத்தகையோரது மாய வலையில் சிக்கி அடியேன் அலையாமல்

(யோக வழியில் கிடைக்கும்) சங்க ஓசை ஒலியை (தச) நாதங்களை அனுபவித்து, மிக்க மாயையாம் இருள் வெந்து அழிய, மூலாக்கினி வீசிட, உபதேசத்தை (எனது) குளிர்ந்த காதில் ஓதி, (உனது) இரு பாத மலரைக் கூடுமபடியான திரு வருளைத் தந்தருளுக.

சிங்கார ரூப மயில் வாகனனே நமோ நம! கந்தனே, குமரனே, சிவனுக்குக் குரு மூர்த்தியே நமோ நம! குங்குமம் அணிந்துள்ள பார்வதியின் பிள்ளையாய் அமைந்தவனே நமோ நம என்று வெற்றிச் சின்னங்களின் ஓசை

கடல் போல முழங்க, ஜோதி ஒளி கொண்ட வேலவனே நமோ நம! எலும்பாரணனும, சடாமுடி உடையவனுமான சிவனுக்குக் குருமூர்த்தியானவனே நமோ நம என்று முழங்கவும், வலிமை மிக்க தாரகியரும. கடலும், எழுகிரி. கிரவுஞ்சம் ஆகிய மலைகளும் பொடியாக (வை) கூரிய வேலைச் செலுத்தின முருகோனே!

இங்கித வேத பிரமாவை விழ மோதி,ஒரு
பெண் காதலோடு வன மேவி வளி நாயகியை
இன்பான தேனிரச மார்முலை விடாத கர மணி மார்ப

எண தோளர் காதல் கொடு காதல் கறியெ பருகு
செங்காடு மேவி,பிரகாச மயில் மேல் அழகொடு
என் காதல் மாலுமுடி ஆறுமுகவா அமரர் பெருமானே

<u>திருநளாறு</u> 246

(46) <u>யதுகுலகாம்போதி</u> . (7½) <u>-3/4</u> (1½+2+4)

பச்சை ஒண் கிரி போல இரு மா தன(ம்)
உற்(று) இதம் பொறி சேர் குழல், வாள் அயில்
புற்று புண்டரிகாம் என, ஐய் கயல் விழி,ஞான
பத்தி வெண் தரளாம் என வாள் நகை,
வித்ருமம் சிலை போல் நுதல் வாரிதழ்
பத்ம செண்பகமாம்,அநுபூதியின் அழகான் என்று

இசை,அந்தரி. பார்வதி மோகினி
தத்தை மொனகவின் ஆலிலை போல் வயிறு
இற பசுங்கிளியான மின் நூல் இடை அபிராமி
எக்குலம குடிலோடு உலகு யாவையும்
இற்பதிந்து இரு நாழி நெலால் அறம்
எப்போதும் பகிர்வாள குமரா என உருகேனே

இனிமை வாய்ந்த வேதம் படித்த பிரமன் விரும்பி அவனை மோதியும் (46)
ஒப்பற்ற பெண்ணாகிய வள்ளி மேல் கொண்ட காதலொடு, தினைப்புனத்துக்குச்
சென்று அந்த வள்ளி நாயகியின் இன்பமயமான தேன் போல இனிப்பதான
மார்பினை விடாத கரதலமும், அழகிய மார்பும் கொண்டவனே!
எட்டுத் தோள்கள் கொண்ட சிவபெருமான், ஆசையுடனே பிள்ளைக்கறியை
உண்ட திருச்செங்காட்டங்குடி என்னும் தலத்தைச் சேர்ந்து ஒளி வீசும்
மயில் மேல் அழகாக வீற்றிருந்து, அடியேனுடைய ஆசையால் எழுந்த
இத்தமிழ்ப் பாடலை புனைந்தருளும் அறுமுகத்தனே! தேவர் பெருமானே!

திருநள்ளாறு . 246

(46) பச்சை நிற முள்ளதும், ஒளி உள்ளதும், மலைபோன்ற இரண்டு பெரிய தனங்
களைக் கொண்டு இன்பம் அனுபவிக்கும வண்டுகள் சேர்கின்ற கூந்தலையும்,
(மான) ஒளி கொண்ட வேல போன்றதும, தாமரையின தன்மையது என்று சொல்லத்
தக்கதும், கயல் மீன் போன்றதுமான கண்களையும், ஞான ஒளி
வரிசையில உள்ள வெள்ளை முத்துக்கள் போன்ற ஒளி வீசும பற்களையும்,
(பிறை போல் நுதல்) வில்லுக்கு ஒப்பான நெற்றியையும் (விதுரும் பத்மம் செண
பகம் போல் இதழ்) பவளம், தாமரை, செண்பகம் இவைகளுக்கு ஒப்பான
இதழ்மையும் உடைய, ஞான அருட்பிரகாச அழகி - எனப்படுபவள்
இச்சையெல்லாம் பூர்த்தி செய்யும் பராகாச வடிவி, பார்வதி பேரழகி
(தத்தை) கிளி பொனனின் அழகு வாய்நத ஆலிலை போன்ற வயிற்றினள், அன்ப
ம் நடத்தும் பைங்கிளி போல்பவள், மின்னலும் நூலும போன்ற இடை உடைய அழகி
எல்லாக குலத்தாருக்கும, எல்லா உடலுக்கும், உலகங்கள் யாவைக்கும்,
பொருந்த இடத்தில் இருந்தே, இரண்டு படி நெல் கொண்டு 32 அறங்களையும்

கச்சையும் திருவாளும் இராறுடை
பொற்புயங்களும் வேலும் இராறுள
கட்சிவம் கமலா முகம் ஆறுள முருகோனே
கற்பகம திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் வித்தையர் மாகர் சுயாஞ் என
கஷ்ட வெங் கொடு தூர்கிள வோற விடும் வேலா

நச்சு வெண் பட(ம) மீது அணைவாா, முகில
பச்சை வண் புயறா, கருடாசனா,
நற கரம் தநு.கோல்,வளை,நேமியர் மருகோனே
நற்புனந்தனில் வாழ் வ(ள்)ளி நாயகி
இச்சை கொண்(டு) நரு வாரண மாதொடு
நத்தி வந்து நளாறு உறை தேவாகள் பெருமானே

திருநாகேசுசுரம் 247

(247) ரேவதி (ஐ½) (ம) (1+½+2+4)

ஆசாரஈனக குதர்கக துஷடாகள்
மாதா பிதாவைய பழிதத துஷ்டாகள
ஆமாவின உன்னை செகுதத துஷடாகள பர தாரம்
ஆகாது எனமற யோகிதத துஷ்டாகள
நா ஊ உபாயச சரிதர துஷடாகள
[illegible] தமியோரா சொம

எப்போதும் பங்கிடு அளிப்பவன் ஆகிய பார்வதி குமரனே என்று கூறி உள்ளம் உருக மாட்டேனோ!

அரையிற் கச்சை, அழகிய வாள், பன்னிரண்டு அழகிய புயங்கள், வேல, பன்னிரண்டு கண்கள் மங்களமான தாமரையன்ன திருமுகங்கள் ஆறு இவை கொண்ட முருகனே!

கற்பக விருக்ஷம் உள்ள, செல்வமிக்க பொன்னுலகம் உயர்ந்த வாழ்வைப் பெற சித்தர்களும், வித்தையாகளும், (விண்ணுலகத்துத்) தேவர்களும் 'சபாஷ்' என்று மெச்சக், கஷ்டம் கொடுத்து வந்த, மிகக் கொடிய சூரனது சுற்றத்தார் யாவரும் வேரறச் செலுத்திய வேலனே!

விஷமுள்ள வெண்ணிறப் படம் கொண்ட ஆதிசேஷன் மீது (அணை) படுக்கை கொண்டவர், மேக நிறம், பச்சை நிறம் கொண்ட வளமார்ந்த புயத்தை உடையவர் கருட வாகனம் கொண்டவர். நல்ல கரத்தில் வில், அம்பு, சங்கு, சக்கரம் கொண்டவர் மருகனே

நல்ல தினைப்புனத்தில் வாழ்ந்த வள்ளி நாயகியின் மீது காதல் கொண்டு, ஒப்பற்ற யானை வளர்த்த தேவசேனையுடன் விருப்பத்துடன் வந்து திருநள்ளாறு என்னும் தலத்தில் உறைகின்ற, தேவர்கள் பெருமானே.

திருநாகேசுரம் 247

(247)

ஆசார ஒழுக்கங்களில் குறைபாடு உடையவர்களாய். விதண்டா வாதம் செய்யும் துஷ்டர்கள், தாய் தந்தையரைப் பழிக்கின்ற துஷ்டர்கள், பசுவின் மாமிசத்திற்காக அதைக் கொல்லும் துஷ்டர்கள் பிறன் மனைவியை (இச்சித்தல்) கூடாது என்னும் நல்லறிவு இன்றி அனுபவித்த துஷ்டர்கள், பலவித தந்திரச் செயல்களைச் செய்த வரலாற்றை உடைய துஷ்டர்கள் கள்ளைக் குடித்த துஷ்டர்கள், திகற்ற பாகனின் (சொம) சொத்தை

கூசாது சேரப் பறித்த துட்டர்கள்
ஊரார்கள் ஆசைய பிதற்று துட்டர்கள்
கோலால வாள் விற் செருக்கு துட்டர்கள் — குருசேனை
கூடாத பாவத்து அவத்த துட்டர்கள்
ஈயாது தேடிய புதைத்த துட்டர்கள்
கோமாள நாயிற் கடைப் பிறப்பினில் — உழல்வாரே

வீரா விசாலப் பொருப்பு எடுத்து எறி
பேர் ஆரவாரச் சமுத்திரத்தினில்
மீனாமல் ஆடித துரத்தி யுடற்று — அருமானை
வேரோடு வீழத் தறித்(து) அடுக்கிய
போரடு சாமர்த்தியத் திருக்கையில்
வேலாயுதா, மெய்த் திருப்புகழ்ப் பெறு — வயலூரா
நாசாதி பீரரத்த துக்க மிக்கவர்
மாயா விகாரத் தியக்க (அ)றுத்தருள்
ஞானோபதேசப் பிரசித்த, சற்குரு — வடிவான

நாதா எனக் குறித்திடப், புவி
ஆதாரம் ஆயதைக்கு, முட்ட முற்று அருள்
நாகேச நாமத் தகப்பன் மெச்சிய — பெருமானே.

புவி ஆதாரம் ஆயதைக்கு — உலகுக்கெல்லாம் ஆதாரமாய்ப் பயன்படும்படியா
: அது வளியின் ஆக்கமாம்
முட்ட முற்று அருள் , பிரணவப் பொருள் முழுமையும் விவரித்து வின

கூசாமல் தமக்குச் சேரும்படி பிடுங்கின துஷ்டர்கள், எல்லாருடைய
ஆசைகளையும் (தாமே கொண்டு) அறிவின்றிக் குழறும் துஷ்டர்கள், ஆடம்பர
வாள் போரிலும், வில் போரிலும் அகந்தை கொண்டு (தீயன செய்யும்) துஷ்டர்கள், ஒரு குவை
கிடைக்க பெருத்த பாவமும், கேடும் கொண்ட துஷ்டர்கள், ஒருவருக்கும்
நெருக்காமல் பொருளைத் தேடி புதைத்து மறைத்துச் சேகரிக்கும் துஷ்டர்கள்
இவர்கள் யாவரும் கும்பானம் போடும் நாயின் இழிவான பிறப்பை அடைந்து அதில்
அழுசல் உறுவார்கள்

வீசிப் பெரிய (மலையை எடுத்து) மலை போன்ற அலைகளை எடுத்து எறிகின்ற
மிக்க ஒலியைப் பெருக்கும் கடலில, திரும்ப முடியாத வகையில் ஓடத்
துரத்திப், பயங்கொண்ட அந்த ஒப்பற்ற மாமரம் சூரனை
வருடன விரும்படியாக வெட்டிக் குவித்த போரினைச் செய்த, திறமை
வாய்ந்த திருக்கையில் உள்ள வேலாயுதனே! மெய்ம்மையே வாய்த்த
திருப்புகழை (யான் ஓதி நீ) பெற வைத்த வயலூரானே!

கேடு முதலிய தீயன பயக்கும் (ப்ராரத்த) இம்மையில் அனுபவிக்க வேண்டிய பழவினையால் வரும் துக்கம் மிக்கவர்களுடைய மாயை சம்பந்தமாய்க்
கவலையைத் தரும் மயக்கத்தை ஒழித்தருளும் ஞான உபதேசம் செய்த
கீர்த்தியைக் கொண்ட சற்குரு வடிவமான
'நாதனே' என்று முன்னொரு காலத்தில் (உன்னை உன் தந்தை) துதி செய்ய,
உலகினருக்கு ஒரு ஆதாரவுச் சாதனம் (பிரமாணம்) ஆகும் பொருட்டு - முழுதும்
நன்கு நீ அருளிய 'நாதேசன' என்னும் திருப்பெயரை உடைய தந்தையாம்
சிவபெருமானை மெச்சப் பெற்ற பெருமானே

ன ஒரு நீதி நெறி விளக்கும் - அதனை முருகவேள் சிவனுக்கு உபதேசித்தார்

க்குதல்

(48) நாட்டை (8) 1½+2+1½+1½+1½

அறிவு இலாதவர், ஈனர், பேச்சு இரண்டு
பகரு(ம்) நாவினர், லோபர், தீக்குணங்கள்
அதிக பாதகர், மாதர் மேற் கலன்கள் புனை,ஆதர்

அசடர், பூமிசை வீணராய்ப் பிறந்து
திரியு மானுடர், பேதை மார்க்கு இரங்கி
அழியு மாவினர், நீதி நூற பயன்கள் தெரியாத
நெறியிலாதவர், சூதிலே கவர்ந்து
பொருள் செய் பூரியர், மோகமாய்ப் ப்ரபஞ்ச
நிலையில வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறித்
நினைவு பாழ்பட, வாடி, நோக்கிழந்து,
வறுமையாகிய தீயின் மேல் கிடந்து
நெளியு நீள் புகுவாயினேற்கு இரங்கி அருள்வாயே
நறிய வார குழல் வான நாடு அரம்பை
மகளிர் காதலர் தோள்கள் வேட்டிணங்கி
நகை கொடு ஏழிசை பாடி மேல் பொலிந்து களிகூர
நடு இலாத குரோதமாய்த் தடிந்த –
தகுவர் மாதர் மணாளர் தோட பிரிந்து
நசை பொருது அழுது அகமாயத் தருங்கி இடர்கூர
மறியும் ஆழ் கடலூடு போய்க் கரந்து
கவடு கோடியின் மேவுமாய்ப் பரந்து
வனடு மா இரு கூறதாய்த் தடிந்த வடிவேலா

(48)

அறிவு இல்லாதவர்கள், இழிவானவர்கள், பேச்சு இரண்டு பேசும் நாவினை உடைய வர்கள் (சொன்ன சொற்களை மாறுபவர்கள், உலோபிகள், கெட்ட குணங்களை கொண்டு மிக்க பாபச் செயல்களைச் செய்பவர்கள், (பொது) மகளிர்க்கு ஆபரணங்களைப் புனைந்து பார்க்கும் அறிவிலிகள்

அசடர்கள், பூமியில் வீண்காலம் போக்குபவர்களாய்ப் பிறந்து திரிகின்ற மனிதர்கள், பெண்கள் மீது (காம) இரக்கம் கொண்டு அழியும் ஆசை மனத்தி னர்கள், நீதி நூல்களின பயன்களை அறியாதவராய்,

நன்னெறியிற் போகாதவர்கள், சூதினால் பொருள் கவர்ந்து, அப்பொருளைச் சேகரிக்கும் (பூரியர்) கீழ் மக்கள், ஆசை பெருக்கால உலக நிலையையே (இன்பத் தையே) விரும்பும் மூடர்கள் - இத்தகையோரிடம் சென்று நல்லதமிழ் பாடல்களை கூறி,

நினைவு தேய்ந்து பாழாக, வாடி, கண்பார்வை மங்கி, தரித்திரம் என்ற நெருப்பிலே கிடந்து நெளிகின்ற பெரிய புழுப்போல ஆன என்மீது இரக்கம் கொண்டு அருள்புரிவாயாக

நறுமணம் கொண்ட நீண்ட கூந்தலை உடைய தேவலோகத்து அரம்பை மகளிர், தம் தம காதலர்களுடைய தோள்களை விரும்பிப் பொருந்தி, களிப்புடன இசை பாடியும குதூகலித்து மகிழ்ச்சி பொங்கவும

நடுநிலைமை (நியாயம்) இல்லாதவராய், கோபம் மிக்கவராய் (தகுந்த) அழிதொழிலைச் செய்த அசுர மகளிர தஙகள கணவர்களின் தோள்களைப் பிரிந்து, ஆசையை அடக்க முடி யாமல் அழுது, தேகத்தை நொந்து துயரம் கொண்டு வருந்தவே பெருகவும்

அலைகள் கிளர்ந்து எழும் ஆழ் கடலின உள்ளே சென்று மறைந்து கிளைகள் கோடிக கணக்கின மேலாக விரிந்து வளர்ந்த (சூரனும்) மா மரம் இரண்டு கூறாகும்படி வெட்டிப் பிளந்த கூரிய வேலாயுதனே!

மருவு காள முகில்கள் கூட்டெழுந்து
மதி உலாவிய மாட மேற் படிந்த
வயல்கள் மேவு நெல்வாயில் வீற்றிருந்த பெருமானே.

திருப்பந்தணைநல்லூர் 249

(49) ஹிந்தோளம் (3½) (ூ) 2+½

இரு வினை அஞ்ச வரு வினை கெஞ்ச
இருள பிணி துஞ்ச மலமாய
எனது இடர் மங்க உனது அருள் பொங்க
இசை கொடு துங்க புகழ்கூறித்
திருமுக சுந்தர, முருக, கடம்ப,
சிவ சுத, கந்த, குக வேல
சிவ சிவ என்று தெளிவுறு நெஞ்சு
திகழ நடம் செய கழல்தாராய்
மரு தொடு கஞ்சன் உயிர் பலி கொண்டு
மகிழ் அரி விண்டு மருகோனே
வதை புரிகின்ற நிசிசரர் குன்ற
வலம் வரு செம்பொன மயில் வீரா
அருகு உறு மங்கையொடு விடை உந்து
அமலன் உகந்த முருகோனே
அருள் செறி பந்தணையில் இரு மங்கை
அமளி நலம் கொள பெருமானே.

பொருந்திய கருமேகங்கள் கூட்டமாய் எழுந்து, நிலவு உலவுகின்ற (50)
மாடங்களின் மேற் படிகின்ற, வயல்கள் உள்ள திருநெலவாயிலில்
வீற்றிருக்கும் பெருமானே.

திருப்பந்தணைநல்லூர் 249

(249) சஞ்சித வினை. பிராரத்த வினை இரண்டும் பயபய, வரு வினை- ஆகாமிய வினை- வந்து இனித்தாக்க வேண்டிய வினைகளும், நாங்கள் வரவில்லை எனறு கெஞ்சிக் கூத்தாடி விலக. திரண்ட நோய்கள் வராது மடிய. மும்மலங்களும் மாய-அழிந்தொழிய

எனனுடை வருத்தமெல்லாம் குறைந்து ஒழிய, உனனுடைய திருவருள் மேம்படப் பெருக. இசையுடனே பரிசுத்தமான உனது திருப்புகழை ஓதி

சந்திரன் போன்ற குளிர்ந்த அழகிய திருமுகத்தை உடையவனே! முருகா! கடம்பா! சிவகுமாரா! கந்தா! குகா! வேலா!

சிவ சிவ என்று கூறி, அதனால், தெளிவு பெற்ற எனது நெஞ்சு பொலிவு பெற நடனம் புரியும் உனது திருவடியைத் தந்தருளுக!

மருத மரம், கம்சன- இவர் தம் உயிரைப் பலி கொணடு (மாய்த்து) மகிழ்ந்த அரி-திருமாலின மருகனே!

உயிர்களைக் கொன்ற அசுரர்கள் ஒடுங்கி அடங்க, உலகை வலம் வந்த செம்பொன் மயில் மீது விளங்கும் வீரனே!

பக்கத்திலுள்ள தேவி பார்வதியுடன், ரிஷப வாகனத்தைச் செலுத்தும் குறைமறற சிவபெருமான ப்ரியப்படும் முருகோனே!

அருள் நிறைந்த பந்தணை நல்லூர என்னும் தலத்தில் (வள்ளி- தேவசேனை எனனும்) இரண்டு தேவிமார்களின படுக்கை சுகத்தை அனுபவிக்கும் பெருமானே!

திருப்பாதிரிப்புலியூர் 250

பைரவி 7½ ௳ 4+½+2

நிணமொரு குருதி நரம்பு மாறிய
தசை குடல் மிடையும் எலும்பு தோல இவை
நிரை நிரை செறியும் உடம்பு நோய்படு முது காயம்
நிலை நிலை உருவ மலங்கள் ஆவது
நவ தொளை உடைய குரம்பையாம் இதில
நிகழ் தரு பொழுதில, முயன்று மா தவம் உய ஓரும்
உணர்வு இலி, செபம் முதல் ஒன்று தான் இலி,
நிறை இலி, முறை இலி, அன்பு தான் இலி,
உயர்வு இலி எனினும் என் நெஞ்சு தான நினைவு அழியா முன்

ஒரு திரு மரகத துங்க மாமிசை
அறுமுகம் ஒளி விட வந்து நான் மறை
உபநிடம் அதனை விளங்க நீ அருள புரிவாயே
புணரியில் விரவி எழுந்த ஞாயிறு
விலகிய புரிசை இலங்கை வாழ் பதி
பொல மணி மகுட சிரங்கள் தாம ஒரு பது மாறிப்
புவி இடை உருள முனிந்து கூர் கணை
உறு சிலை வளைய வலிந்து நாடிய
புயல அதி விறல அரி விண்டு மால், திரு மருகோனே
அணி தரு கயிலை நடுங்க, ஓர் எழு
குலகிரி அடைய இடிந்து தூள் எழ
அலை எறி உததி குழம்ப வேல் விடு முருகோனே.

திருப்பாதிரிப்புலியூர் 250.

(50)

மாமிசத்தோடு ரத்தம் நரம்பு இவை கலந்துள்ள சதை. குடல். நெருங்கியுள்ள எலும்பு, தோல் இவை வரிசை வரிசையாக நெருங்கியுள்ள உடம்பு. நோய் உண்டாகும் பழைய உடல்

அந்த அந்த நிலை (வயதுக்கு) தக்கபடி, உடல் மாசுக்கள் உண்டாவதும், ஒன்பது தொளைகளையுடைய சிறு குடிலாகிய இந்த உடலில், உயிர் உலவும் பொழுதே, முயற்சிகளைச் செய்து, சிறந்த தவங்களை. உய்யும் பொருட்டு, உணரும் உணர்ச்சி இல்லாதவன் (நான்), ஜெபம், தியானம் முதலான ஒரு நல்லொழுக்கமும் இல்லாதவன். காப்பன காத்துக் கடிவன கடியும் ஆண்மைக் குணம் மாட்சிமை இல்லாதவன், முறைமை - ஒழுக்கம் இல்லாதவன், அன்பு கூட இல்லாதவன், மேன்மைக் குணம் இல்லாதவன் - இவ்வாறு பல குறைகள் இருப்பினும், என் நெஞ்சு நினைவு இடைக்கும் ஒப்பற்ற அழகிய பச்சை நிறமுடைய உயர்ந்த மயில் எனும் குதிரை மேல் (உனது) ஆறு திருமுகங்களும் பிரகாசிக்க வந்து, நான்கு வேதங்கள், உபநிஷதுக்கள் ஆகிய இவைகள் எனக்கு விளங்கும்படி நீ அருள் புரிவாயாக

கடலிற் கலந்து படிந்து எழுகின்ற சூரியன் அருகி விலகும் மதில்களை உடைய இலங்கையில் வாழ்ந்த தலைவன ராவணனுடைய பொன்மய ரத்ன மகுடங்களை அணிந்திருந்த தலைகள் ஒருபதும் நிலை பெயர்ந்து (அறுபட்டு)

பூமியில் உருளும்படிக் கோபித்து, கூரிய அம்புகளைப் பொருத்திய, கையிலிருந்த வில்லை வளைத்து, முயற்சி செய்து தேடிச் சென்ற மேக நிறத்துப் பெருமான் மிக்க வீரம் வாய்ந்த அரி, விண்டு, மால் எனப்பெயர்களையுடைய திருமாலின் அழகிய மருகனே

அருகுள்ள கயிலை மலை நடுங்க - ஒப்பற்ற குல மலைகள் ஏழும், அடியோடு இடிந்து தூள் பறக்க அலை வீசும் கடல் சேறாகிக் குழம்ப வேலாயுதத்தை விடுத்த முருகனே

அமலை முன் அரிய தவம் செய் பாடல
வளநகர் மருவி அமர்ந்த தேசிக,
அறுமுக, குருமகன அன்ப, மாதவர் பெருமானே.

திருப்பாண்டிக்கொடுமுடி 251

(51) மாண்ட் 3½ (-) 2+1½

திருவினைப் பிறவிக் கடல் மூழ்கி
இடர்கள் பட்டு அலையப் புகுதாதே
திருவருட் கருணைப் ப்ரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ
அரி அயற்கு அறிதற்கு அரியானே
அடியவர்க்கு எளி அற் புதநேயா
குரு எனச் சிவனுக்கு அருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமானே.

திருப்புகலியூர் 252

(52) தேஷ் (4½) (-)3/4 (2+1+1½)

பக்குவ ஆசார லட்சண சாகாதி
பட்சண மா மோன சிவயோகா
பத்தியில், அறுறு தத்துவ மேல் வீடு
பற்று, நிராதார நிலையாக
அக்கணமே மாய தாக்குணமே வேறுக
அப்படியே ஞான உபதேசம்

தேவி முன்பு அரிய தவம் செய்த திருப்பாதிரிப்புலியூர் என்னும் வளை
மிக்க திருத்தலத்திலே பொருந்தி வீற்றிருக்கும் குருநாதரே! அறுமுகனே!
குறமகள் வள்ளியின் அன்பனே! பெரிய தவசீலர்களின் பெருமானே!

திருப்பாண்டிக்கொடுமுடி 251

(251)

நல்வினை தீவினைகளின் காரணமாகத் தோன்றும் பிறவி என்னும் கடலில் முழுகி
வேதனைகளில் அவஸ்தைப் பட்டு அலையுமாறு புகாமல்
உனது திருவருளாம் கருணை ஒளியாலே
நிலையான வகையில், நான் நல்ல கதியைப் பெறுவேனோ!
திருமாலும் பிரமனும் அறிவதற்கு அரியவனே!
அடியார்களுக்கு எளிதாகக் கிடைக்கும் அற்புத நண்பனே!
குருமூர்த்தியாய் சிவபெருமானுக்கு அருளிய ஞான சாரியனே!
கொடுமுடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் குமரப் பெருமானே.

திருப்புக்கொளியூர் 252

(252)

சத்துவமான ஆசார நிலையில் நின்று, பொருந்திய தான(சாகாதி) பச்சிலை
முதலான உணவையே உண்டு, சிறந்த மோன நிலையில் நிற்கும் சிவயோகிகள்
பக்தி நிலையில, 36 தத்துவங்களுக்கும் மேற்பட்டதாயுள்ள மோக்ஷ வீட்டைப்
பற்றுவதானதும், எப்பற்றுக்களும் அற்றதுமான நிலையை நான் அடைவதும்
அந்நிலையை அடைந்த அந்த ஜனமே, மாயமாக வந்து, (என்னைப் பற்றியுள்ள)
தாக்குணம் எலலாம் விட்டொழிய, அந்த ஞான உபதேசமே படையாக - ஞானமே
வாட்படையாக

அக்கு அற, வாய் பேசு, சற்குரு நாதா, உன
　　அற்புத சீர் பாதம் 　　　　　　　　மறவேனே.
உக்கிர ஈராறு மெய்ப்புயனே. நீல
　　உற்பல, வீ, ராசி 　　　　　　　　மணம் நாற

ஒத்த நிலா வீசு, நித்தில நீராவி
　　உற்பல ராசீவ 　　　　　　　　வயலூரா
பொக்கம் இலா வீர, விக்ரம, மா மேனி
　　பொற் ப்ரபை ஆகார, 　　　　　　　　அவிநாசி
பொய்க்கலி போமாறு மெய்க்கருள் சீரான
　　புக்கொளியூர் மேவு 　　　　　　　　பெருமானே.

திருப்பெருந்துறை 253

253 முகாரி 　　(16) 　　மு¼ ஆதி 2களை

இரத்தமும் சிய (ம) மூளை எலும்பு (உ) ட்
　　தசைய பசுங்குடல் நாடி புனைந்திடு
　　இறுக்கு மண் சல வீடு புகுந்திட்(டு) 　　அதில் மேவி
இதத்துடன் புகல் சூது மிகுந்திட
　　அகைத்திடும் பொருள் ஆசையெனும் புள்(ள)ட்,
　　டெடுத்திடவும் தெரியாது பறந்திடு 　　மாயா
பிரத்தம் வந்(து) அடு வாத கரம் பித்து
　　உளைப்புடன் பல வாயுவு மிக்கிப
　　டெலுத்தறையுட் சில நாளுள நடுங்கித 　　தடிமேலாய்ப்

(யாசத்தின) உரிமை எல்லாம் (அற) அற்றுப போம்படி, உபதேசமொழியை (53)
வாய் விட்டுரைத்த சற்குரு நாதனே! உன் அற்புத அழகிய திருவடிகளை நான் மறவேன
உள்ளகம் மிக்க பன்னிரண்டு புயங்களை உடையவனே! (மெய்) உண்மை நெறியை
நாட்டும் புயங்களை உடையவனே! நீலோற்பல (வீ) மலர்களின (ராசி) கூட
டங்களின் நறுமணம் வீச,

பொருந்தியதாயுள்ள நிலவொளி வீசுவதும், முத்துப்போல் தெளிவு உள்ளதான
(ராசி) நீர்நிலைகள், குவளை மலரையும், தாமரையையும் கொண்ட வயலூர் பெருமானே!
பொய் இல்லாத (மெய்யான) வீரனே! பராக்ரமசாலியே! அழகிய மேனி
(நிறம்) பொன் ஒளி வீசும் தேகத்தையுடையவனே! அவிநாசி என்னும தலத்தில்
கலியின பொய்ம்மை (அசத்திய நிலை) நீங்குமாறு, இறைவனுடைய திருவருளின
மெய்ம்மை நிலை சீரோங்கி - புகழோங்கி விளங்கினதுமான திருப்புக்கொளி
யூர் எனனும் தலத்தில வீற்றிருக்கும் பெருமானே!

திருப்பெருந்துறை 253

(253) ரததமும், சீழும், மூளை, எலும்பு. உள்ளே உள்ள (தசை) மாமிசம்,
பசிய குடல, நாடிகள், இவைகள் கொண்டு கட்டப்பட்டு. அழுத்தமாய்க்
கட்டப்பட்டுள்ள மண்ணாலும், நீராலும் ஆன (கூட்டில்) உடலில
துவழ்வு பெற்று, அதில் இருந்து

இதமாய்ப பேசும் சூதான மொழிகள் மிகுதியாய கிளைதது எழுகின்ற பொருளை
என்கிற பறவை, பிறர் தெளிவு பெறச் சொன்னாலும் - அறிவுறுத்தினாலும் - தெளி
யாமல் - மேலும் மேலும் பறப்பதாயிருக்க - பிரபஞ்சமாயை என்பது

அதிகரித்து வந்து உண்டாகும் வாதம், சுரம், பித்தம் இவைகளின வேதனைகளுடன்
பலவகை வாயுக்களும் அதிகரிதது இருக்கின்ற பலத்தைச சிலநாட்களுக்குள்
ஒடுக்கி தடிமேல் கை ஊன்றுவதாய்

பிடித்திடும் பல நாள் கொடு, மந்திக
குலத்(து) எனும்படி, கூனி அடங்கிப்
பிசக்கு வந்திடு போது பின் அஞ்சிச் சடம் ஆமோ
தரித்த னந்தன தானன தந்தத்
திமித் திமிந் திமி தீதக திந்தத்
தடுட்டு டுண்டுடு டேடி மீண்டிட் டியல் தாளம்
தனத் தகுந் தகு தானன தந்தக்
கொதித்து வந்திடு சூர் உடல் சிந்தச்
சலத்துடன் கிரி தூள்பட எறிந்திட் டிடும் வேலா
சிரத்துடன் கரம் ஒடு பொழிந்திட
திரைத்து வந்து அமரோர்கள் படிந்துச்
சிரத்தினும் கமழ் மாலை மணம் பொற் சரணேனே
செகத்தினின் குருவாகிய தந்தைக்கு
அளித்திடும் குரு, ஞான பரசங்கத்
திருப்பெருந்துறை மேவிய கந்தப் பெருமானே.

திருப்போரூர் 254

(254) பந்து வராளி - $(5\frac{1}{2})$ (-) $1\frac{1}{2}+2+2$

திமிரம் ஆம் மன, மா மட, மடமையேன் இடர், ஆணவ
திமிரமே, அரி சூரிய, திரிலோக
தினகரா, சிவ, காரண, பனக பூஷண, ஆரண
சிவ சுதா, அரி நாரணன மருகோனே

பிடித்து நடப்பதான பல நாட்களை செல்ல, குரங்குக் கூட்டத்தவன் (54)
இவன் என்று சொல்லும்படி, உடல் கூனி, சத்துக்கள் அடங்கி, (பிசகு)
(பிசகு) அழிவு வந்திடும் சமயத்தில் பின்பு அஞ்சுவதான தேகம் ஆமோ! (பிறவி வேண் பாம் என்று 114)

தரித்த னந்தன தானன தந்தத் திமித் திமிந்திமி
தீதக திந்தத் தடுடடு டுண்டுடு டுடுடு டிண்டிட என ஒலிக்கின்ற
தாளத்துடன்

தனத் தகும் தகு தானன தந்த என்று கோபித்து எழுந்து வந்த சூரனுடைய
உடல் அழியவும், கடல் வற்றிப் போவதுடன் எழுகிரி கிரௌஞ்சமும் பொடி
படவும், வேலாயுதத்தைச் செலுத்தி நின்ற வேலனே.

நல் வணக்கத்துடன், கையானது மலர் ஏடுகளை (மலர்களை) பொழிந்து
போற்றி செய்யும் ஒலியுடன் வந்து தேவர்கள் (உன்னை வணங்குவதால்) அவர்க
ளுடைய தலையில் மணக்கின்ற மாலைகளின் மணத்தைப் பெற்ற அழகிய திருவடி
களை உடையவனே
உலகுக்கெல்லாம் குருவாய் விளங்கும் உனது தந்தைக்கு
(உபதேசம்) அளித்த குருவே! (சிவ பெருமான் அடியார் கூட்டத்துக்கு) ஞானப்
பிரசங்கம் செய்த திருப்பெருந்துறையில் விரும்பி வீற்றிருக்கும் பெருமானே.

திருப்போரூர் 254

(254)

இருள் கொண்ட மனத்தையும், மிகுந்த அறியாமையும் கொண்ட என்னுடைய
வருத்தம், ஆணவம் என்னும் இருட்டை (அரி) விலக்கும் சூரியனே! மூவுலகங்
களுக்கும்
(ஒளிதரும்) சூரியனே! சிவனே! மூல புருஷனே! நாகாபரணா!
வேத முதல்வரான சிவபெருமானின் திருக்குமாரனே! ஹரி
நாராயணரது மருகனே!

குமரி, சாமளை, மாது உமை அமலி, யாமளி, பூரணி,
    குண கலா நிதி நாரணி   தருகோவே
குரு குகா குமரேசுர சரவண சகளேசுர
    குறவர் மா மகள் ஆசை கொள்   மணியே, சம

பமர பார பரபா அருண படல, தாரக, மா சுக,
    பசுர பாடன, பானித   பகன ஏச.

பதித பாரண, வாரண துவச, ஏடு அக, மா அயில்
    பரவு பாணித, பாவல,   பரயோக

சம பராமத சாதல, சமயம் ஆறு இரு தேவத,
    சமய நாயக. மா மயில்   முது வீர

சகல லோகமும், மாசு அறு சகல வேதமுமே தொழு,
    சமரா புரி மேவிய.   பெருமாளே

--- --- ---

உட்சமயம்-6 = வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம்
வைதிகமதம்-6 சைவம், வைஷ்ணவம், சாக்தம், ஸௌரம், காணபத்தியம்
கௌமாரம்   [செ.பி]

குமரி, பச்சை நிறமுடையவள். மாது. உமை. மலமற்றவள், இளமையானவள்,
எங்கும் நிறைந்தவள், குணச் செல்வி, கலைச் செல்வி, நாரணி பெற்ற தலைவனே
குருமூர்த்தியே! குகனே! குமரேசனே! சரவணனே! உருவத் திருமேனி கொண்ட
சனே! ஐராவதம் சிறந்த மகள் வள்ளி மீது ஆசை கொண்ட மணியே, நன்கு ச
(பம்பரம்) வண்டுகள் மொய்க்கும் பாரமான நனி வீசும் சிவந்த (படல) கூட்
மான (வெட்சி) மாலைகளை அணிந்தவனே! பிரணவப் பொருளானவனே!
பெரிய சுகத்தைத் தருபவனே! (மாசுர) திருப்பாசுரம் பாடி (உலகுக்கு நீதி)
பாடண- உபதேசித்தவனே! சந்தனக் குழம்பை அணிந்த சக்திக்கு நாயக
னை சிவபெருமானுக்கு உரிய

திருநீற்றில் மகிழ்ச்சியுடையவனே! கோழிக் கொடியனே! மேன்மைக்கு
இருப்பிடமானவனே! பெருமை தங்கிய வேலாயுதத்தை ஏந்திய திருக்
கரத்தினனே! பாடலில் வல்லவனே! மேலான யோக மூர்த்தியே!
(சமம்) வாதப் போர் செய்யும் (பர மத) புற மதங்களான (பௌத்தம, சமணம்)
இவைதம - நசிவுக்குக் காரணமாயிருந்தவனே! அகச்சமயம் ஆறு, புறச்சமயம்
ஆறு என்ற பன்னிரு சமயங்களுக்கும் தெய்வமாக விளங்குபவனே! சமயங்க
ளுக்கெல்லாம் தலைவனே! அழகிய மயில் மேல் வரும் பேரறிவு வாய்ந்த வீரனே!
எல்லா லோகங்களும், குற்றமற்ற எல்லா வேதங்களும் தொழுகின்ற
திருப்போரூர் என்னும் பெருமை மிக்க நகரில் வீற்றிருக்கும் பெருமானே!

--- --- - ---

<u>அகப்புறச் சமயம்</u> பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய வாத சைவம்

<u>அகச்சமயம்</u> பாஷாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்த வாத சைவம், ஈசுவர அவிகார வாத சைவம், சிவாத்வித சைவம்

[வாரி

255 ராமப்ரியா (8) ரூ ஆதி

அமரும் அமரரினில் அதிகன் அயனும், அரி
அவரும வெருவ வரும் அதி காளம்
அதனை, அத காரண விதனை, பரிபூரணம
அமை அ(ன)னவா கரணை, அகிலாச.
நிமிர அருள் சரணை, நிபிடம் அது எனை, உ(ன்)னை
நிமிர, சமிரமய நியமாய

நிபிடம் அதனில் உணவல சிவசுதவர
நினைது பதவி தர வருவாயே.

சமரச (அ)மர சுர, அசுர இதர பர
சுரத விரத அயில விடுவோனே

தகுர்த தகுாத திகு திகுாத திகுாத திகு
தரர ரரரரிரி தகுர் தாத
எமர நடன விதமயிலின முதுகில் வரு
கிமைய மகள குமர எமது ஈச
கியவின கியவ மயிலை நகரில் கினிது உறையும்
எமது பர குரவ பெருமானே

(255)

பொருந்திய தேவர்களில் மேம்பட்டவனான இந்திரன், பிரமன், திருமால் ஆகிய இவர்கள் அச்சமுற்று வந்த பெரிய விஷம்

அந்த விஷத்தை. (கரண விதன அத) மனோ துக்கத்தை நாசம் செய்தவனே! சிந்தை நிறைவு. சாந்தம் அமைந்தவர்கள் மனதில் இருப்பவனே! சகலதத்துக்கும் ஈசனே

(தாழ்வு நீங்கி) நிமிர - உயர்ச்சி பெற, (சரணம் அருள்) உனது திருவடி அருள் புரிய வேணும்; (நிமிடம் அது) நெருங்கி வருகின்றது அந்த விஷம் என்று (தேவர்கள்) முறையிட, (உனை நிமிர) நினைக்கின்ற அவ்வளவு பொழுதிலே - நினைக்குமளவிலே - நினைத்தவுடனே, (சமீரன் மய) வாயுவின் தன்மையில் - வாயு வேகத்தில், (நியமாய) [சரணம் அடைந்தவர்களைக் காப்பதே) கடமையாக - முறைமையாக

நிமிஷ நேரத்தில் (அந்த விஷத்தை) உண்ண வல்ல - உண்டருளின சிவனுடைய (வர சுத) சிரேஷ்டமான குமரனே! உனது குக சாயுஜ்ய பதவியைத் தர வந்தருளுவாயாக

நற்றுமையும் அமரத்வமும் உடைய தேவர்களுக்கு, (இதர பர அசுர) பகைவராகிய கீழான அசுரர் மேல், உண்மையான அகசா சக்தியாகிய (ஆணை தருவதாகிய) வேலைச் செலுத்தியவனே!

தகுர்த தகுத திகு திகுர்த திகுத திகு தரர ரரரரிரி தகுர் தாத என்ற தாள ஜதியுடன்,

எம்மவர்க்கு வேண்டிய நடன வகைகள் கொண்டுள்ள மயிலின் முதுகின் மீது வருகின்ற இமராஜன் மகள் பார்வதி பாலனே! எமது ஈசனே!

இயற்றமிழ் விளங்கும் மயிலாபுரி எனும் நகரில் இன்பமுடன் வீற்றிருக்கும் எங்கள் மேலான குருமூர்த்தியே! பெருமாளே!

(256) பூர்வி கல்யாணி $10\frac{1}{2}$ 256 (-) $(\frac{1}{2}+6+3)$ (57)

அறம் இலா அதி பாதக வஞ்சத் தொழிலாலே
அடியனேன் மெலிவு ஆகி, மனம் சற்று இளையாதே
திறல் குலாவிய சேவடி வந்தித்து அருள் கூட
தினமுமே மிக வாழ்வுறும் இனைய தருவாயே
விறல் நிசாசரா சேனைகள் அஞ்சப் பொரும்வேலா
விமல, மாது அபிராமி தரும் செல்வ புதல்வோனே.
மறவர் வாள் நுதல் வேடை கொளும் பொற் புய வீரா
மயிலை மா நகர் மேவிய கந்தப் பெருமானே

(257) கீரவாணி $(7\frac{1}{2})$ 257 (-) $\frac{1}{2}+2+4$

இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவும் உலகினில் இகம் உறு பிறவியில்
இனிமை பெற, வரும் இடர் உறு இருவினை அது தீர
இசையும் உனது இரு பதமலர் தனை மனம்
இசைய நினைகிலி, இதம் உற உனது அருள்
இவர உருகிலி, அயாதிலி, தொழுகிலி உமை பாகர்

மகிழும் மகவு என அறைகிலி, நிறைகிலி,
மடமை குறைகிலி, மதி உணர்வு அறிகிலி,
வசனம் அற உறு மவுனமொடு உறைகிலி மட மாதர

256

தருமமில்லாத மிக்க பாவகரமான வஞ்சனை கொண்ட செயல்களாலே அடியவனாகிய நான் தளர்ச்சியுறாது. மனம் நொந்து சோர்வு அடையாமல், வெற்றி விளங்கும் உனது செவ்விய திருவடியை போற்றி வணங்கி திருவருள் கூடுமாறு நாள் தோறும் நல்ல வாழ்வு தரும் இன்பத்தைத் தந்தருளுக.

வலிமை மிக்க அசுரர்களின் சேனைகள் அஞ்சும்படி போர் செய்த வேலனே

பரிசுத்தமூர்த்தியே! அன்னை அபிராமி பெற்ற சிவந்த குமாரனே!

வேடர் குலத்தில் வந்த ஒளி பெற்ற நெற்றி கொண்ட வள்ளியின் மீது வேடை (வேட்கை – விருப்பம்) கொண்ட அழகிய புய வீரனே!

திருமயிலை நகரில் எழுந்தருளியுள்ள கந்தப் பெருமாளே

257

(257) ஒன்றோடொன்று மாறுபட்டு எழுகின்ற அலைகள் பெருகியுள்ள கடல் சூழ்ந்துள்ள உலகத்தில் இம்மையில் உள்ள பிறப்பில் இன்பத்தைப் பெறவும், வருகின்ற துன்பத்தோடு தடைகளோடு கூடிய (நல்வினை தீவினை எனும்) இருவினைகள் ஒழியவும்

பொருந்திய உனது இரண்டு பாதமலர்களை மனம் பொருந்த நினையாதவன், இன்பம் பெற உனது திருவருள் (கிருபா) பொருந்துதற்கு – கைகூடக் கிடைக்க - உருகாதவன், (பக்தியால்) தளர்ச்சியுறாதவன் – தன வசம் அழியாதவன் – வணங்காதவன், உமாதேவியைப் பக்கம் கொண்ட சிவபெருமான்

மகிழ்கின்ற குழந்தையே என்று கூறித் துதி செய்யாதவன், திருப்பதி யில்லாதவன, அறிவின்மை குறையாதவன், அறிவும் தெளிவும் அறியாதவன், பேச்சற்று, பொருந்திய மௌன (சமாதி) நிலையிலே இருத்தல் அறியாதவன, அழகிய மாதர்களின்

மயம அது அடரிட இடர் உறும அடியனும்
இனிமை தரும் உனது அடியவர உடன் உற
மருவ அருள் தரு திருவையின் மலிகுவது குருநாதனே

சிகர தனகிரி குறமகள் இனிது உற,
சிவத, நவம் உறு சில பல வசனமு
இறைய அறை பயில அறுமுக நிறை தரும அருள் நீத

சிரண புரண, விதரண, விசிர வண
சரணு, சரவணபவ, குக, சயன் குனி
திரவ, பர, அதிசிர, மறை முடிவு உறு பொருள நீத

அகர, உகர தீ, மகர தீ, சிகர தீ,
யகர அருள் அதி, தெருள் அதி, வல வல
அரண முரண் உறும் அசுரர்கள் கெட அயில விடுவோனே

அழகும் இலகிய புலமையு மகிமையும்
வளமும் உறை திருமயிலையில் அநுதினம்
அமரும் அரகர சிவசுத அடியவர் பெருமானே.

அழகானது அடரிட- அடர்தல் செய்ய- மனத்திற் செறிந்து இடம் கொள்ள அதனால் துன்பம் அடைகின்றவன் - ஆகிய அடியேனும், இன்ப சுகம் தருகின்ற உன்னுடைய அடியார்களொடு கூடிப் பொருந்தியிருக்கும் திருவருளைத் தருவதான உனது கிருபைக்கு நிறைந்த பாத்திரனாகி விளங்குவதான ஒரு நாள் கிடைக்குமோ!

உயர்ச்சியுற்ற கொங்கை மலைகளைக் கொண்ட குறமகள் வள்ளி இனிமை பெற, (சிலதன்) தோழன் அல்லது ஏவல் செய்வோன் போன்று, நன்மை கொண்ட சில பல பேச்சுக்களாகிய அமுதத்தை (அமுத மொழிகள்) வீசிப் பரப்பி பேசப்பயின்ற அறுமுகனே! நிறைந்து விளங்கும் அருள் நிறைந்த நீதிமானே (சீர் அண புராண) பெருமை செறிந்த பழைமையானவனே! தயாள குணத்தனே! (விரவண) நிரம்பிய கோவியை உடையவனே! அடைக்கலம் புகுதற்கு உரிய (உ) இறைவனே! சரவணபவனே! குகனே! சயந்தனாகிய சிவனுடைய ஒளி பாய்ந்தவனே! (ஒளி சாரமே), மேலானவனே! அதிக (இரு) மேன்மை உடையவனே! வேதத்தின் முடிந்த பொருளான நீதியனே!

அகர எழுத்துப் போன்ற முதற் பொருளே! (உகர தீ) சிவசக்தியாய் விளங்கும் நல்லறிவே! (மகர தீ) ஆணவ மலத்தை தகிப்பவரே! (சிகர தீ) சிவமாகிய அறிவே! (யகர) ஜீவான்மாவில் விளங்குபவனே! (அதி அருள்) அதிக அருளே! (அதி தெருள்) அதிக ஞானமே! மிக்க வலிமை வாய்ந்த காவற் கோட்டைகளிலிருந்த, பகைமை பூண்ட அசுரர்கள் அழியும்படி வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

அழகும், விளங்கும் கல்வி ஞானமும், பெருமையும், வளப்பமும் நிலைத்திருக்கும் மயிலாப்பூரில் நாள்தோறும் வீற்றிருக்கும் பாவத்தை அழிப்பவராகிய சிவகுமாரனே! அடியவர் தம் பெருமானே!

258

58 கலயாண வஸந்தம் (5½) (ங) ½+½+1+1½ 59

கடிய வேகம ஆருத விரத சூதா, அபாதர்,
கலகமே செய் பாழ்மூடர் வினை வேடர்
கபட ஈனர் ஆகாத இயல்பு நாடியே, நீடு
கண விகாரமே பேசி நெறி பேணக்
கொடியன் ஏதும் ஓராது, விரக சாலமே மரு
குடிலின் மேவியே நாளும் மடியாதே

குலவு தோகை மீது ஆறுமுகமும் வேலும், ஈராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே
படியிலேறு மாமேரு அதிர வீசியே, சேட
பணமும் ஆடவே நீடு வரை சாடிய,
பரவை ஆதி நீர் மோத, நிருதர் மாள, வானநாடு
பதியதாக, வேல் ஏவும் மயில் வீரா
வடிவுலாவி ஆகாச மினிர் பலாவின் நீள் சோலை
வனச வாவி, பூவோடை வயலோடே
மணி செய் மாட, மா மேடை சிகரமோடு வாகு ஆன
மயிலை மேவி வாழ தேவர் பெருமானே

விகாரம் – காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்,

259

259 சுபபந்து வராளி (5) (ங) /5

திரை வார் கடல் சூழ் புவிதனிலே உலகோரொடு
திரிவேன், உனை ஓதுதல் திகழாமே

கடுமையான (வேகம்) கோபம் குறையாத சங்கறபங்களை உடைய 59
வஞ்சகர்கள். (அபாதர்) கீழானோர் (தீயர்), கலகத்தையே செய்கின்ற
பாழான மூடர்கள், தீவினையே விரும்புவோர்
வஞ்சனை கொண்ட இழிந்தோர் இததனையோருடைய, நல்லது ஆகாத முறை
களை விரும்பியே, பெரிய வலியுள்ள அவமடசணங்களையே பேசி, நன்னெறியைப்
கொடியவனுகிய நான், எதையும ஆராய்ந்து அறியாமல், ஆசைக — பொருந்த
உட்டங்களை முடியுள்ள இந்த குடிசையாகிய உடலில் இருந்து கொண்டே
தினந்தோறும் அழிவுறுமல்
விளங்கும் மயில் மீது, ஆறுமுகமும், வேலும், பனிரண்டு குவளைமலர் மாலை
அணிந்த தோளகளும் அடியேன் நேராக எதிரே காணும்படி வருவாயே
பூமியோடு பெரிய மேருமலை அதிரும்படியாகச செலுத்தி, ஆதிசேடனுடைய பண
முடங்கள் அசைவுறவும், பெரிய மலைகளை மோதி
பரந்த கடலில் நீர் மோதவும், அசுராகள் மாளவும், வானுளோர் நாடு செழிப்
புள்ள நகரமாகவும், வேலாயுதத்தைச் செலுத்தின மயில் வீரனே!
அழகுடன வளர்ந்து ஆகாயம் வரை வளர்ந்து விளங்கும் பலாமரங்களின் செறிவு
சாலையும். தாமரைக் குளமும், மலா ஓடைகளும், வயல்களும்
அழகுள்ள மாடங்களும், சிறந்த மாடங்களின சிகரஙகளும் ஒன்று கூடி
அழகு விளங்கும் மயிலாப்பூரில் விரும்பி வாழகின்ற தேவர் பெருமானே
செம்பு. அக்னிய என எண்வகைப்பட்ட துர்க்குணம்

259

259) அலைகளுடன கூடிய, (வார்) நீண்ட கடலாற சூழப்பட்ட பூமியிலே, உலகத்
தாரோடு, உன்னை ஓதிப புகழ தவ இலலாது, திரிகின்றேன (இனி)

தின நாளும,முனே துதி மனது அர, மினே, சிவ

சுதனே, திரி தேவர்கள் தலைவா, மால்

வரை மாது உமையாள் தரு மணியே, குகனே, என

அறையா, அடியேனும் உன் அடியாராய்

வழிபாடு உறுவாரொடு அருள் ஆதரமாயிடும்

மக நாள் உளதோ, சொல அருள்வாயே

இறை, வாரண தேவனும், இமையோர் அவர் எவரும்

இழிவு ஆகி, முனே, இயல இலர் ஆகி

இருளாரம் மனதே உற, அசுரேசர்களே மிக

இடரே செயவே, அவர் இடர் தீர

மற மா அயிலே கொடு உடலே இரு கூறு எழ

மத மா மிகு சூரனை மடிவு அக

வதையே செயும மாவலி உடையாய அழகாகிய

மயிலாபுரி மேவிய பெருமானே

260

திருமாநதுறை

(260) ஆஹிரி (ஓ) (-) ஆதி

அம் குடல வளைந்து, நீங்கு பல் நெகிழ்ந்து

ஆயந்சு தளா சிந்தை – தடுமாறி

ஆறந்துள கடனகள் வாங்கவும் அறிந்து

ஆண்டு பல சென்று கிடையோடே

ஏங்கிருமல் வந்து வீங்கு குடல் நொந்து

தேய்ந்து உணா(வு) அழிந்து உயிர போமுன்

நாள தோறும், முன்னதாகத் துதிக்கும் மனநிலை நிரம்பப் பெற்று, (60)
பின்னர், "சிவ குமரனே, மும்மூர்த்திகளின் தலைவனே! பெருமை பொருந்திய
மலை மாது உமையாள் பெற்ற மாணிக்க மணியே! குகனே! என்று
(அறையா) துதி அடியேனும் உன்னுடைய அடியவர்களாதி
வழிபாடு செய்பவர்களோடு அருளன்புக்கு உரியவனாகின்ற விசேட நாள் ஒன்று
உண்டாகுமோ? (மேற்கூறியவாறு உன நாமங்களைச்) சொல்ல அருள் புரிவாயாக
தேவர்களுக்குத் தலைவனை, வெள்ளையானை மேல் வருகின்ற இந்திரனும், ஏனைய
தேவர்கள் யாவரும் இழிவான நிலையை அடைந்து முன்பு, தமது தகுதியை இழந்த (வர்களாகி)
இருண்ட மனத்தையுடையவர்களாக, அசுரத் தலைவர்கள் மிகுந்த
துன்பங்களைச் செய்த போது, அத்தேவர்களின் துன்பம் நீங்க
வீரம் வாய்ந்த சிறந்த வேலாயுதத்தைக் கொண்டு, உடல் இரண்டு கூறுபட
ஆணவம் கொண்ட மா மரமாய் நின்ற சூரன் அழியுமாறு
வதை செய்த மகா வலிமையை உடையவனே! அழகு வாய்ந்துள்ள
மயிலாப்பூரில் வீற்றிருக்கும் பெருமானே.

திருமாந்துறை 260

260)

நோயிருந்த குடல் வளைவுற்றுக் கூனி விழ வேண்டிய பற்கள் தளர்ச்சி
யுற்று, ஆய்ந்து ஓய்வுறும் மனம் தடுமாற்றம் அடைந்து
நிறைய இருந்த கடன்கள் வாங்க வேண்டியவற்றை அறிந்து (வாங்கி)
பல வருஷங்கள் (கிழவனாய்) செல்ல, படுக்கையிலேயே கிடந்து
நிரம்ப இருமல் ஏற்பட்டு, வீங்கும் குடலும் நோயுற்று, சோர்வு அடைந்து
பேச்சியும் அடங்கி, அழிந்து, உயிர் போவதற்கு முன்பு

ஓங்கு மயில் வந்து, சேனை பெற இசைந்து
　　ஊன்றிய பதங்கள் — தருவாயே
வேங்கையும் உயர்ந்த தீம்புனம் இருந்த
　　வேந்திழையின் இன்ப — மணவாளா
வேண்டும் அவர தங்கள பூண்ட பதம மிகு ச
　　வேண்டிய பதங்கள — புரிவோனே
மாங்கனி உடைந்து, தேங்க வயல் வந்து
　　மாணபு நெல் விளைந்த — வளநாடா
மாந்தர், தவர, உம்பர் கோன், பரவி நின்ற
　　மாந்துறை அமர்ந்த — பெருமானே

திருமுருகன் பூண்டி 261

(261) துர்கா (7) 4 ௦ (ட) 1+½+½+3

அவசியம் உன் வேண்டிப் — பலகாலும்
　　அறிவின் உணர்ந்து அணுக்கு — ஒரு நாளில்
தவ செபமும தீண்டிக் — கனிவாகி
　　சரணமதும பூண்டற்கு — அருள்வாயே
சவதமொடும தாண்டித — தகர் ஊர்வாய்

　　சரு சமயம காண்டற்கு — அரியானே
சிவகுமர அன்பு ஈண்டிற் — பெயரானே
　　திருமுருகன பூண்டிப் — பெருமானே

விளங்கி நிற்கும் மயில மேல் வந்து, (அடியேன்) வினுலகை அடைவதற்கு 61
வம் உவந்து நம்பி, நில பெற்ற உனது பதங்களைத் தந்தருளுக
வேங்கை மரஙகளும உயர்ந்தோங்கியுள்ள இனிய தினைப்புனத்தே இருந்த
மாதேவி வள்ளியின் இனிய மணவாளனே!
வேண்டிக் கொள்ளும் அடியார்கள் கொண்டுள்ள (பதம மிகுச) பதவி மேம்
படு விளங்க, அவாகள் விருமபின பதவியை (அல்) திருவடிகளை அருள் புரிபவனே!
ாரம்பழம் உடைந்து, அதன் சாறு வயலில் வந்து தேங்க. (அதனால்) நல்ல அழகிய
நல் விளையும் வளபபமுள்ள (சோழ) நாடனே!
ானிதவர்களும், தவசிகளும், தேவேந்திரனும் பரவிப் போற்ற நின்ற
ஆந்துறையில வீற்றிருக்கும பெருமானே

திருமுருகன்பூண்டி 261

1) (உன்னைப் பணிவது) அவசியமெனை அறிந்து (உன்) உன்னைப பணிந்து,
(பல காலும் வேண்டி) பல முறையும் பிரார்த்தித்து
ான் அறிவில் உன்னை உணர்ந்து வருவதற்கு ஒரு தினமாவது
வ நருக்கத்தையும் - ஜெப ஒருககத்தையும் மேற்கொண்டு உள்ளம் கனிந்து
உன்னுடைய திருவடியையும் (மனத்தே) தரிப்பதற்கு அருள்புரிவாயாக
னைத் அடக்குவேன் என்னும ப்ரதிகஞையொடு குதிதது ஆடடின் மீது
றி அதை செலுத்துவாய்!
று சமயத்தவராலும் காணுதற்கு அரியவனே!
வ குமரனே! அன்பு கொண்டு நெருங்கில், அவரை விடடுப் பிரியாதவனே!
திருமுருகன பூணடி என்னும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே

திருவக்கரை 262

(262) குந்தலவராளி (8) (ட) ஆதி

கலகலெனச் சில கலைகள் பிதற்றுவது
ஒழிவது, உனைச் சிறிதும் உரையாதே
கருவழி தத்திய மடு அதனிற் புகு
கரு நரகுக்கிடை கிடை வீழா
உலகுதனிற் பல பிறவி தரித்து அற
உழல்வது விட்டு இனி அடி நாயேன்
உனது அடிமைத்திரள் அதனிலும் உட்பட
உபய மலர்ப்பதம் அருள்வாயே
குலகிரி பொட்டெழ அலைகடல் வற்றிட
நிசிசரனைப் பொரும் அயில் வீரா
குணதர, வித்தக, குமர, புனத்திடை
குறமகளைப் புணர் மணிமார்பா
அலை புனலிற் தவழ் வளை நிலவைத் தரு
மணி திருவக்கரை உறைவோனே
அடியவர் இச்சையில் எவை எவை உற்றன
அவை தரு வித்து அருள் பெருமானே.

திருவிதாயம் 263

ஷண்முகப்ரியா (8) (ட) (1+½ + ½+1 +3)

மருமல்லி ஆர் குழலின் மடமாதர்
மருள் உள்ளி நாய் அடியன் அலையாமல்
:

திருவக்கரை

262

(262) கலகல என்னும் ஓசையுடன் சில நூல்களைக் கற்று பிதற்றுதல் ஒழிய வேண்டியது; உன்னைக் கொஞ்சமேனும் துதிக்காமல்

கருவிற் புகுதற்கு வேண்டிய வழியிலே வேகமாகச் செலுத்தும் மனவில் (பள்ளத்திற்) புகுந்து, பொல்லாத நரகத்தின் மத்தியில் விழாமல்

உலகிலே பல பிறப்புக்களை எடுத்து மிகவும் திரிதலை விட்டு, இனியேனும், அடிநாயேனாகிய நான் —

உன்னுடைய அடியார் கூட்டத்திலும் உட்பட்ட உருவனாக, உனது இரண்டு மலர்ப்பாதங்களை அருள்வாயே

கூட்டமான எதிரிகள் தோள்பட்டுப் பொடிபட, அலைகடல் வற்றிப்போக அசுரனும் தூளெழ சண்டை செய்த வேல் வீரனே!

நற்குணத்தவனே! ஞான மூர்த்தியே! குமரனே! தினைப்புனத்திடையே குறமகள் வள்ளியை அணைந்த அழகிய மார்பனே!

அலைவீசும் நீரிலே தவழுகின்ற சங்குகள் ஒலியை வீசுகின்ற அழகிய திருவக்கரை என்னும் தலத்தில் உறைபவனே!

அடியார்களுடைய விருப்பத்தில் என்ன என்ன உள்ளனவோ, அவைகளை வழுவறைத்துப் பூர்த்தி செய்யும் (தந்து உதவும்) கருணை மூர்த்தியாம் பெருமானே.

263

திருவதிதாயம்

(263) வாசனை பொருந்திய மல்லிகை மலர் நிறைந்த கூந்தலையுடைய அழகிய (பொது) மகளிர் மீதுள்ள

காம மயக்கம் கொண்ட, நாய் போன்ற அடியேன் அலைச்சல் உறுமல்

(63)

இரு நல்ல அகம் உனது அடியேனை
இனவல்லமான மனது அருளமேயோ
கரு நெல்வி மேனி அரி மருகோனே
கன வள்ளியார் கணவ முருகேசா
திருவல்லிதாயம் அதில உறைவோனே
திகழ் வல்ல மா தவர்கள பெருமானே

திருவாஞ்சியம் 264

காம்போதி (6) ⊖ 1+½+½+2

இப(ம்) மாந்தர் சக்ரபதி செறி
படை ஆண்டு, சக்ர வரிசைகள்
இட வாழ்ந்து, திக்கு விசய(ம்) மண் அரசாகி
இறுமாந்து வடட அனைமிசை
விரி சார்ந்து வெறி மலர்த்தொடை
எழில்ஆர்ந்த பட்டி வகை, பரிமள லேபம்
தபனுங்க ரத்ன அணிகலன்
இவை சேர்ந்த விச்சு வடிவு (இ)து
தமர் சூழ்ந்து மிக்க உயிர் நழு வியபோது

தழல் தாங் கொளுத்தியிட, 3(ரு)
பிடி சாம்பல் பட்டது அறிகிலர்
தன வாஞ்சை மிக்கு உன் அடி தொழ நினையாரே

பிணிகளைத் தரும் (இரு) இரண்டாகும் உனது திருவடிகளை விரும்பிப் போற்ற
தகதான உயர்ந்த (பெருமை வாய்ந்த) மனத்தை அருள மாட்டாயோ!
நெல்லி போன்ற திருமேனியை உடைய திருமாலின் மருகனே!
நேர்மை பொருந்திய வள்ளியம்மையாரின் கணவனே! முருகேசனே!
திருவீழிதாயம எனனும் தலத்தில் வீற்றிருப்பவனே!
ஞானத்தால விளங்கும் மகா தவசிகளின் பெருமானே!

திருவாஞ்சியம் 264.

(இபம்) யானைப்படை, (மாந்தர்) காலாட்படை, முதலிய படைகளை உடைய
சக்ரவர்த்தியாய், நிறைந்துள்ள (நால்வகைப்) படைகளையும் ஆண்டு (அரசு
புரிந்து) தனது ஆக்ஞா சக்கரம் வேலை முறைகளை நடத்த அங்ஙனம் வாழ்ந்து,
திக்விஜயம் செய்து, உலகுக்கு அரசனாகி (ஏக சக்ரவர்த்தியாகி)
இருமையடைந்து, வட்ட வடிவமான சாய்வு மெத்தை அணையின் மேல் உள்ள
விரிப்பிற சார்ந்து- சாய்ந்தமைந்து- வெற்றி மலர் மாலை (என்ன) அழகு நிறமுள்ள
படி) ஆடை (துணி) வகைகள் என்ன; நறுமண கலவைப் பூச்சு (என்ன)
தன அங்கம்) சூரிய ஒளியைத் தன் உறுப்பிலே- தன்னகத்தே- கொண்ட
ரத்ன மணியாலாய ஆபரணங்கள் என்ன! இங்ஙனம் இவையெல்லாம் சேர்ந்த
தரு (மனித) வித்தின் வடிவு இது; (இவ்வடிவினின்றும்- இவ்வுடலினின்றும்)
உறவினர் சூழ்ந்திருக்கப் பெருமை மிக்க உயிரானது பிரிந்து போன பொழுது
நெருப்பிலே இட - அந்த நெருப்பு கொளுத்தி விட (ஈற்றில்) அவ்வுடல்
திருப்பிடி சாம்பலான நிலையை அடைவதை அறிந்திலர், பொருளாசை
மிகுந்து உனது திருவடியைத் தொழ நினைக்கின்றார் இல்லை - நினைப்பதில்லை

உபசாந்த சித்த, குருகுல
பவ பாண்டவர்க்கு வரதன், மை
உருவோன், ப்ரசித்த நெடியவன், ரிஷிகேசன்

உலகு ஈன்ற பச்சை உமை அ(ண்)ணன்
வடவேங்கடத்தில் உறைபவன்
உயர் சார்ங்க சக்ர கரதலன் மருகோனே
த்ரிபுர அந்தகற்கு வர சுத,
ரதி காந்தன் மைத்துன முருக
திறல் பூண்ட சுப்ரமணிய, ஷண் முகவேலா
திசை பாய்ந்த பத்ம தட, வய
லியில் வேந்த, முத்தி அருள தரு
திருவாஞ்சியத்தில் அமரர்கள் பெருமானே.

திருவாடானை 263.

(65) செக்குருட்டி (2½) (உ 1+½)

ஊன அரும் உட பிணியும அற கவித்த உடல்
ஊதாரி பட்டு ஒழிய உயிர் போனவ்
ஊரார் குவித்து வர ஆவா எனக் குறுகி
ஓயா முழக்கம் எழ அழுது, நய

புன்னாக வராளி

நான விதச சிவிகை மேலே கிடத்தி அது
நாறுது எடுதது அடவி எரி ஊடே

மன அமைதி கொண்ட சித்தம்- உள்ளத்தை உடையவர்களும், குரு குலத்தில் (பவ) உதித்தவர்களுமான (பஞ்ச) பாண்டவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தவன், கரு மேக நிறத்தவன், கீர்த்தி பெற்ற விசுவரூபம் கொண்டவன், ரிஷிகேசன் (இருடி கேசன்)
உலகங்களைத் தந்த பச்சை நிற உமையம்மையின் அண்ணனும், வடவேங்கடத்தில் உறைபவனும், மேலான சாரங்கம்(வில்), சுதர்சன சக்கரம் இவைதமைக் கையகத்தே கொண்டவனும் ஆன திருமாலின் மருகனே
முப்புரங்களுக்கு அந்தகனயிருந்த (அழித்த) சிவபெருமானுக்கு சிரேஷ்டமான பிள்ளையே! ரதியின் கணவன் மன்மதனுக்கு மைத்துன முறை உடைய முருகனே! பராக்ரமம் வாய்ந்த சுப்ரமணியனே! ஆண்டவனே (வேலனே)
அலைகள் பாயும் தாமரைத் தடாகங்கள் உள்ள, வயலூர் அரசே.
மூ(க்)தியைத் தருவதான திருவாசியம் என்னும் தலத்தில் தேவர்கள் பெருமானே!

திருவாடானை 265

ஊன (மாமிசமும்) அரும்-நிறைந்து உள்ளே இருக்கும் நோய்களும் (அற) நீங்காது வினைய மூட்டப்பட்ட இந்த உடல் (ஊதாரி படு) கெடுமாறு நீங்கும்
பதி- அழியும்படி - உயிர் போய் விடுதல்
ஊரார்கள் கும்பு கூடி வர, ஐயோ என்று கூறி அவர்கள் அணுகி ஓய்வில்லாத கூச்சல் உண்டாகும்படி அழுது, பின்னர் அழுகை அடங்க

பல விதமான பல்லக்கின் மேல் (பிணத்தைக்) கிடத்தி, அது துர்நாற்றம் வீசும் முன் எடுத்துக் கொண்டு போய் சுடுகாட்டில் எரியின் மத்தியிலே

நாமமல் வைத்து விட நீயும் என இப்பிறவி
நாடாது எனக்கு உன் அருள் புரிவாயே

நாதநாமக்ரியா

மால் நாக துத்தி முடி மீதே நிருத்தமிடு
மாயோனும், மட்டு அருகு மலர் மீதே
வாழ்வா(ய்) இருக்கும் அரு வேதாவும் எண் திசையும்.
வானோரும் அஷ்ட குல கிரி யாவும்

காபி

ஆசு அரக்கருடன் வானோர் பிழைக்க, அரும
ஆலால முற்ற அமுது அயில்வோன், முன்
ஆசார பத்தியுடன், ஞான ஆகமத்தை அருள்
ஆடானை நித்தம் உறை பெருமானே

திருவாரூர் 266

(266) ஸ்ரீரஞ்சனி (3) (✓) /3

நீதான் எத்தனையாலும் நீடூழிக் கருமையாகி
மாதானத் தனமாக மாஞானக் கழல் தாராய்
வேதா மைத்துன வேளே வீரா, சற்குண சீலா
ஆதாரத்து ஒளியானே ஆரூரிற் பெருமானே

கூசாமல் வைத்து விட (அவ்வுடல்) சாம்பலாகும் என்ற விதியுள்ள கிந்தப் பி
றவியை நான் விரும்பாதபடி எனக்கு உன திருவருளைத் தருவாயே.

காளிங்கன் என்னும் பெரிய பாம்பின் (குத்தி) புள்ளிகள உள்ள படத்தின் மே
லே நடனம் செய்த திருமாலும், தேன் ஒழுகும் தாமரை மலர் மேல்
வாழ்வு கொண்டிருக்கும் ஒப்பற்ற பிரமனும், எட்டுத் திசையில் உள்ளவர்களு
தேவர்களும், சிறந்த அஷ்ட கிரிகளில் உள்ளவர்களும்
(கடல் கடைந்த போது அங்கு) அறு-நீங்காது நின்ற அசுரர்களுடன்,
வானோர்களும பிழைக்கும்படி, எழுந்த ஆலகால விஷம் (முற்று) அத்தனையும்
அமுதமாக உண்ட சிவபெருமான், முன்பு
ஆசாரத்துடனும் பத்தியுடனும் (கேட்க அவருக்கு) ஞான ஆகமப் பொருள்
வேதாகமங்களின் ஞானப் பொருளை உபதேசித்த பெருமானே! திரு ஆடானை
என்னும் தலத்தில் நாள் தோறும் வீற்றிருக்கும் பெருமானே!

திருவாரூர் 266.

(6)
(முருகா) நீ தான் எவ்வகையாலும் - எல்லா வகையாலும், (என் மீது) நீண்ட
உறுதி காலம் வரையில் (எப்போதும்) கிருபை கூர்ந்தவனாகி
சிறந்த ஞானப் பொருளாக, மேலா ஞான பீடமாகிய உனது
திருவடியைத் தந்தருளுக
பிரமாவின் மைத்துனனாகிய செவ்வேளே! வீரனே! நற்குண சீலனே!

ஆறு ஆதாரங்களிலும் ஒளியாய் விளங்குபவனே! திருவாரூரில் பெருமானே

பாவோ, தேனே, பலவுரு சுனையது
தானே, வானோர் அமுது கொல, கழைரச
பாகோ, ஊனொடு உருகிய மகன் உனை — அருள் குகனே
பாவோ, வேறோ மொழி என, அடு கொடு
வேலோ, கோலோ விழி என, முகம் அது
பானோ. வான் ஊர் நிலவு கொல் என மகன் — மகிழ்வேனே

நாலாம் ரூபா, கமல ஷண்முக நனி.
ஏதோ. மா தோம் எனது அகம் வளர் நனி;
நானே நீயோ படிகளொடு நனிர் கிடம் — அது சோதி
நாடோ வீடோ நடு மொழி என, நடு
தூணோ தோளா, சுரமுக கண சபை
நாதா தா தா என உருகிட அருள் — புரிவாயே

மாவாய் வானோர் மலர் மழை பொழிய
அவதாரா, சூரா, எனை முநிவர்கள் புகழ்
மாயா ரூபா அரகர சிவசிவ — என ஓதா
வாதாடு ஊரொரு அவுணரொடு அலை கடல
கோ கோ கோ கோ என மலை வெடிபட
வாளால் வேலால் மடிவு செய்து அருளிய — முருகோனே

(267) பாலோ! தேனோ! பலாப்பழத்தில் உள்ள சுளை தானோ! தேவர்கள் உண்ணும் அமுதம் தானோ! கரும்பு ரச வெல்லப்பாகோ! ஊன் தன்று பட (குழந்தையாய் அவதரித்த) அல்லது ஊன் உருகப்பாடிய மகண - திருஞான சம்பந்தர் உண்ணும்படி (தேவி) அருளிய ஞானப்

பால் தானோ! வேறு ஏதாவதோ. (மகளிரின்) மொழி என்றும், (அந்த கொடு) கொல்லுதலைக் கொண்ட வேல்தானோ, அம்பு தானோ (அவர்களின) கண்கள் என்றும், முகமானது (பானோ) பாறுவோ- சூரியனோ. ஆகாயத்தில் ஊர்ந்து செல்லும் சந்திர ஒளியோ என்றும் (மகன்) பெண்கள் பால மகிழ்ச்சிகொள்ளும் (நாலாம்) பல உருவமும் கொண்டவனே! தாமரை போன்ற ஆறுமுக ஒளியே! நான் வேறு எதுவோ! (மா தோம) பெரும் குற்றம் கொண்ட என்னுடைய மனத்தில ஊர்கின்ற ஜோதியே! நானே நீயோ பளிங்கு போல விளங்கும்இடம், அது ஒரு சோதி

நாடுதானோ அல்லது மோக்ஷவீடோ! நடுநிலைமையான உண்மையை மொழி என்று வேண்டி, நடுவில் உன்ன தாளுக்குச் சமமான தோளகளை உடைய வனே! தேவர்கள் முன்னிலையில் பெருமை தங்கிய சபையில் நாதயை விளங் குபவனே! (உன திருவருளைத்) தா தா- கொடு கொடு என்று என் மனம உருகுமாறு திரு அருள் புரிவாயே!

காதல் பூண்டவராய்த் தேவர்கள் பூமாரி பொழிய அவதரித்தவனே! சூரனே! என்று முனிவர்கள் புகழும் மாயரூபனே! ஹர ஹர சிவ சிவ என்று ஓதாமல்

வாதாடி நின்ற அவுணர்களும், அவர்தம் ஊரில் இருந்தவர்களும் அலைகடலும் கோகோ கோகோ என்று அலறவும், மலைகள் - ஏழுகிரி கிரவுஞ்சம் பொடிபட்டுப் பொடியாதவும், வாளாலும் வேலாலும் அவர்களை அழிவு செய்தருளிய முருகனே!

தவாள், மாலாள், மலர் மகள் கலைமகள்
ஒது ஆர் சீரான், கதிர மதி குலவிய
தோடாள, கோடார இணை முலை குமரி, முன் அருள்பாலா

தாயா ராயார் இது சுக சிவ பத
வாழ்வாம் ஈனே பதிவம் என உணர்வொடு
சூழ் சீர் அரோ மருவிய இமையவர் பெருமானே

268 நிலாம்பரி (16) 266 (ப) ஆதி-2 களை
பாலோ, தேனோ, பாகோ, வானோர்
பாரா வாரத்து அமுதேயோ
பாரோர் சீரோ, வேளோர் வாழ்வோ,
பானோ, வான் முத் தென. நீனத்
தாலோ தாலேலோ பாடாதே
தாய்மார் நேசத்து உனா சாரம்
தாராதே பேர் ஈயாதே, பே
சாதே ஏசத் தகுமோ தான்
ஆலோல் கேளா, மேலோர நாணமா
ல் ஆனது, ஏனற் புனமே போய்
ஆயாள் தாள் மேல் வீழா, வாழா,
ஆளா வேளைப் புகுவோனே

துர்க்கை, திருமாலுக்கு உரியவளாம், பூமகள்-லக்ஷ்மி, சரஸ்வதி இவர்கள் ஜொலித்து நிற்கும் சீர் படைத்தவள், ஒளி வீசும் நிலவின் ஒளி கொண்ட தோடு என்னும் அணியை அணிந்தவள் (அல்லது) சூரியனையும் சந்திரனையும் தோடாகக் (குழை) கொண்டவள், மலை போன்ற கொங்கை இரண்டை உடைய குமரி- தேவியின் அருளொடு அளித்த குழந்தையே!

பரிசுத்தமாக இருப்பவர்கள், இதுவே (இத் திருவாரூர் வாழ்வே) சுகமான சிவ பத வாழ்வு, இத்தலத்திலேயே நாம் இனித் தங்கி வாழ்வோம் என்ற ஞான உணர்ச்சியோடு வந்து சூழ்கின்ற சிறப்புள்ள திரு ஆரூரில் சேர்ந்துள்ள தேவர் பெருமானே.

268

8)

பால் தானோ நீ, தேன் தானோ நீ, வெல்லக்கட்டி தானோ நீ, தேவர்கள் (பாராவாரத்து) கடலினின்றும் கடைந்தெடுத்த அமுதமோ நீ

உலகோரின் சிறப்புப் பொருளோ நீ, மன்மதன் போன்ற அழகிய வாழ்வோ நீ, பரஞ்சோதி- பானுவோ-சூரியனே நீ- (வான்) சிறந்த முத்தோ நீ என்று விரிவாகத் (தாய்மார்) தாலோ தாலேலோ என்று என்னை (அருமையுடன்) பாடாமலும், தாய்மார்கள் அன்புடனே, (உன்னை) நினைத்து, தன சாரமாம்- முலைப்பால்

தராமலும், (புகழ்ச்சிக்குரிய) போதனையும் கொடாமலும், (அன்புடன் என்னுடன்) குலவாமலும், இகழ்ச்சிக்கிடமாய நான் வளர்வது நீதியோதான்!

(ஆலோலம்) வள்ளி அயல் ஓடும் ஒலியைக் (கேளா) கேட்டு (மேலோர் நாள்) ஒருநாள், ஆசை(கெடா) குறையா வகையில், தினைப்புனத்துக்குச் சென்று தாய வள்ளியின் காலிலே வீழ்ந்தும், அதனால் வாழ்வு பயன்பட்டதென்று வாழ்ந்த அம்மை வள்ளிக்கு ஆனைக சமயத்தில் புகுந்து நின்றவனே! (அல்லது) வேளைக்காரனைத் தீயாழ வைவனே!

சேவோடே சோ ஆரால காவார்
சீர் ஆருரிற் பெருவாழ்வே
தேயே, வேளோ, பூவே, கோவே,
தேவே, தேவப் பெருமானே

திருவான்மியூர் 269

(269) தார்மவதி (5) (ᒧ) (1+1½+1½+1)

குசம் ஆகி ஆரும் மலை, மறை மா துண் நூலின் இடை,
குடில் ஆன அல் வயிறு குழை உடே
குறி போகும் மீன விழி, மதி மா முக அருமலர்
குழல் கார் அது ஆன குணம் கிலி மாதர்
புய ஆசையால் மனது உனை நாடிடாத படி
புலையேன் உலாவி மிகு புணாவாகி
புகழான பூமி மிசை, மடிவாய இறாத வகை
பொலிவான பாத மலர் அருள்வாயே
நிச நாரணாதி திரு மருகா, உலாச மிகு
நிகழ், போதம் ஆன, பர முருகோனே
நிதி, ஞான போதம், அரன் இரு காதிலே உதவும்
நிபுண நிசாசரர்கள் குலகாலா

திசை மா முக(ன்) ஆழி அரி மகவான முனோர்கள் பணி
சிவநாதர் ஆலம் அயில் அமுத ஈசர்

சேல் மீனொடு சேர்ந்து ஆரல் மீன்கள் (சாலார்) மிகுந்து நிறைந்[து] 268
துள்ள சீர் பெற்ற திரு ஆரூரில் பெருகு செல்வமே!
சேயே! வேளே! பொலிவுள்ளவனே! தலைவனே!
தேவனே! தேவப் பெருமாளே!

திருவான்மியூர் 269

(269) (குசம்) கொங்கை எனப்பட்ட நிறைந்துள்ள மலை (மறை) தாமரை
யின் அழகிய நுண்ணிய நூல் போன்ற இடை, குடிசை (அல்லது) கருவுக்கு
இருப்பிடமான ஆலிலை போன்ற வயிறு. காதின் குழைக்குள்ளே (குழை-காதணி)
குதிப்புடன் போகின்ற மீன் போன்ற கண், சந்திரனை போன்ற அழகிய முகமாகும்
நிறைந்த மலர், கூந்தலாகிய மேகம் இவைகளைக் கொண்ட நற்குணமில்லாத பொது மகளிரின்
தோள் மீதுள்ள ஆசையினால் என் மனது உன்னை நாடாதபடி, தீழ மகளாகிய
நான் அங்கும் இங்கும் உலாவித் திரிந்து (அதிலேயே) அதிக சோர்க்கை உடையவனாகி
புகழ் பெற்ற இப் பூவுலகிலே. அழிவு உற்றவனாய் முடிந்து போகாத வண்ணம்
பிரகாசமான உனது திருவடித் தாமரையை அருள்வாயே!
மெய்ப்பொருளாகிய நாராயணமூர்த்தி என்னும் தலைவனது அழகிய மருகனே!
உள்ளக் களிப்பு மிகுந்து விளங்கும் அறிவு வடிவான மேலான முருகனே!
* பொக்கிஷம் போன்ற, ஞான போதத்தை - சிறந்த கானை தே சதனை
சிவனது பெரிய காதிலே உபதேசித்தருளிய சமர்த்தனே! இருளில்
சஞ்சரிப்பவர்களான அசுரர் குலத்திற்கு யமன் போன்றவனே
திசைகள் தோறும் முகமுள்ள பிரம தேவன், சக்ரதரனாகிய
திருமால், இந்திரன் முதலானவர்கள் பணிகின்ற சிவமூர்த்தி, நஞ்சை-
உண்ட அமுதம் போன்ற தலைவராகிய சிவபெருமானது
:

திகழ் பாவ, மாகம் உற மணி மாடர் உயர்
திருவான்மியூர் மருவு பெருமாளே

திருவிடைக்கழி 270

70 ஸௌராஷ்டிரம் (3½) (ஸ) ½+2

பகரு முத்தமிழ்ப் பொருளும, மெய்த் தவப
பயனும, எப்படிப் பல வாழ்வும்
பழைய முத்தியிற் பதமும், நடபு உறப
பரவு, கற்பகத் தரு வாழ்வும்
புகர் இல் புத்தி உறவு, அரசு பெறவு உறப
பொலியும அற்புதப் பெரு வாழ்வும்
புவன அகற்றிடப், பல விதத்தினைப்
புகழ் பலத்தினைத் தர வேணும்
தகரில் அறை கைத்தலம் விடப வினைச்
சரவணத்தினிற் பயில்வோனே

தனி வனத்தினிற் புன மறத்தியைத்
தழுவு பொற் புயத் திருமார்பா
சிகர வெற்பினைப் பகிரும, விதத்தகத்
திறல அயிற கடாக குமரேசா
செழு மலர்ப் பொழில் குரவம் உறை, பொற்
திருவிடைக்கழிப் பெருமானே

வினக்கமுற்ற குமாரனே! ஆகாயத்தை அளாவும்படி அழகிய
மாளிகை மாடங்கள் உயர்ந்துள்ள திருவான்மியூரில் வீற்றிருக்கும் பெருமானே.

திருவிடைகழி 270

(மூ) ஆன்றோர்களால் புகழப்படுகின்ற முத்தமிழ் நூல்களின் செம்பொருளையும்,
மையான தவத்தால் பெறப்படும் பயனையும், எந்த எந்த உலகங்கள் உளவோ
ந்த அந்த உலகங்களின் பயன் தரும் வாழ்வையும்
பழமையான முத்தி நலமாகிய மெய்ப்பதமும், யாவரும் நட்பு வைத்துப் போற்றும்
ற்பக விருக்ஷ தேவலோக வாழ்வையும்
குறைவில்லாத அறிவையடைந்து அரச வாழ்வைய பெற்று மிகவும் விளங்கும
திசயிக்கத்தக்க சிறந்த வாழ்வையும்,
ஐம்புலச் சேஷ்டைகள் அழிந்திட, உனது பல வகைப்பட்ட பெருமைகளை புகழும்
றலையும் - அறிவின் பலத்தையும்நாவின் வன்மையையும் - தந்தருள வேணும்
(தக்க யாகத்தில்) தகர்க்கப்பட்டு அற்றுப் போன கைகளை கொண்ட அக்கினி
வனது கைகள் (கங்கையில்)விட்டு விட, (பின்) சேர்ந்த சரவணப்
பொய்கையின் கண் பொருந்தி இருந்தவனே
தனியாக வள்ளிமலைக் காட்டில் தினைப்புனம் காத்திருந்த வேடப் பெண் வள்ளியி
ழகின அழகு புயங்களையும் திருமார்பையும் உடையவனே,
உயர்ந்த கிரௌஞ்ச மலையைப் பிளந்த, ஞானமே யான, ஆற்றல் மிக்க, கூர்மை
பொருந்திய ஒளிவீசும் வேலாயுதத்தை உடைய குமரேசனே!
செழுமை மிக்க மலர்ச் சோலைகளில், குராமரங்கள் பொருந்திய
அழகிய திருவிடைகழியில் எழுந்தருளியுள்ள பெருமானே

(271) ரேவதி (5) 271 ७ 1+1½+1½+1

படி, புனல், நெருப்பு, அடற பவனம், வெளி, பொய்க, கருப

பலமுறை அமைந்தது, முக் குணநீடு

பயில் பிணிகள், மச்சை, சுக்கிலம் உதிரம் அத்தி, மெய்ப

பசி, படு நிணச, சடக குடில் பேணும்

உடலது பொறுத்து, அறக் கடை பெறு பிறப்பினுக்கு

உணர்வுடைய சித்தம் அற்று அடி நாயேன்

உழலும் அது கறபு அலக், கழலிணை எனக்கு அளித்து

உனது தமர் ஒக்க வைத்து அருள்வாயே

கொடிய ஒரு குக்குடக் கொடிய, வடிவிற் புனக்

கொடி படா புயக கிரிக கதிர வேலா

குமர சமரச் சிகைகும் அரவு அணி அத்தன் மெய்க

குமர, மகிழ முத்தமிழப் புலவோனே

தட விகட மதகத் தட வரையர் அதந்ர் அதத,

அடல் அனுச, மித்தகத்து உறைவோனே

தரு மருவும, எதலத்தரும் மருவ முத்தியைத

தரு திருவிடைக்கழிப பெருமானே

பூமி. நீர், நெருப்பு வலிமை கொண்ட வாயு, ஆகாயம், பொய், கருவிற்
பிறப்பு கூடும் அவஸ்தை, முக்குணங்கள் (சாத்துவிகம், ராஜசம், தாமஸம்) நெடிதாய்
கூடி வரும் நோய்கள், மூளை (அல்) எலும்பின் சத்து சுக்கிலம். ரத்தம்.
எலும்பு உடலில் உண்டாகும் பசி. உள்ள மாமிசம், இவை கூடிய
அறிவிலாத பொருளாகிய சிற்றிலாகப் போற்றப்படும் (இந்த)
தேகத்தைத் தாங்கி, மிகவும் கீழானதாய்ப் பெறப்பட்ட இப்பிறப்பிலே
ஞானத்தோடு கூடிய உள்ளம் இல்லாது போய், அடி நாயேனாகிய நான்
உழலுவது நீதியன்று, ஆதலால் நீ உனது திருவடியை எனக்கு அளித்து
உனது, (உனை அண்டியுள்ள பழைய) அடியார் கூட்டத்துடன் என்னையும்
ஒரு சேர வைத்து அருள் புரிய வேண்டுகின்றேன்

கொடுமை வாய்ந்த ஒப்பற்ற கோழியைக் கொடியாக உடையவனே!
அழகுள்ள தினைப்புனத்து வள்ளிக் கொடி படரும் புயமலைகளை உடைய கதிர்வேலனே
இளையோய! போரில மிகக் கோபிக்கும் பாம்பை அணியும் ஐயன சிவபெ
ருமானது மெய்ப் புதல்வனே! (யாவரும்) மதிக்கும் முத்தமிழில் வல்ல புலவனே
விசேஷமான அழகிய மத்தகத்தோடு கூடிய பெரிய மலையை ஒத்தவரான
கணபதியின் (அத்தர்) தந்தையின (அத்த) குருவே! (அந்தக் கணபதியின)
அதில் அனுச- பராக்ரமம் வாய்ந்த தம்பியே! ஞான நிலையில உறைபவனே!
விருக்ஷங்கள பொருந்தி விளங்கும் திருவிடைகழிப் பெருமானே!
(எத்தலத்தரும) எந்தப் பூமியில் உள்ளவரும் தன்னிடம் அடைந்தால்
அவருக்கு முத்தி நிலையைத் தரும் திருவிடைகழிப் பெருமானே.

பழியுறு சட்டகமான குடிலை எடுத்து, இழிவான
பகரும், வினைச செயல், மாதர் தருமாயப்
படுகுழி புக்கு இனிது ஏறும் வழி தடவித் தெரியாது
பழமை பிதறிடு லோக முழுமூடர்
உழலும் விருப்புடன் ஓது பல சவலைக் கலை தேடி
ஒரு பயனைத் தெளியாது வினையாமுன்
உன கமலப் பதம் நாடி, உருகி உளத்து அமுது ஊற
உனது திருப்புகழ் ஓத அருள்வாயே
தெழி உவரிச் சலராசி மொகு மொகு எனப், பெரு மேரு
திடு திடு எனப் பல பூதர் விதமாகத்

திமி திமி எனப், பொரு சூரன் நெறு நெறு எனப, பலதேவர்
ஜெய ஜெய எனக், கோதி வேலை விடுவோனே

அழகு தரித்திடு நீப, சரவண உற்பவ, வேல,
அடல் தரு கெறசித நீல மயில வீரா

அருணை, திருத்தணி, நாகமலை, பழநிப்பதி, கோடை
அதிப, திடைக்கழி மேவு பெருமானே.

பாவம் - குற்றம் இவைகளுக்கு இடமான உடலாகிய இந்தக் குடிசையை எடுத்து, இழிவான சொற்களைச் சொல்லும், வினையைப் பெருக்கும் 7/ செயல்களை உள்ள, மாதர்கள தருகின்ற மாயமான படுகுழியில் வீழ்ந்து நல்லபடி கரையேறும் வழி உண்டோ எனத் தடவிப் பார்த்தும் தெரியாமல் பழங் கொள்கைகளையே பிதற்றும் லோகத்தில் உள்ள மூடர்கள திரிந்து, ஆசையுடன் ஓதுகின்ற பல மனக்குழப்பம் தரும் நூல்களைத் தேடி குருபயனையும் தெளிந்து கொள்ள முடியாமல் இறந்து போவதற்கு முன்பாக, உன்னுடைய தாமரைப் பதங்களை விரும்பி. உருகி உள்ளத்தே பத்தி அமுத ரசம் ஊற உனது திருப்புகழை ஓதுதற்கு அருளவாயே!

முழங்குகின்ற (உவரி) உப்பு நீரைக் கொண்ட கடல், மொகு மொகு என்று கொந்தளிக்கவும், பெரிய மேரு மலை, திடு திடு என்று இடிபட்டுப் பொடி படவும், பல வகைப் பூதர்கள் விதம் விதமாகத்

திமிதிமி என்று களிப்புறவும், சண்டை செய்த சூரன் (மாமரம்) நெறு நெறு என்று முறியவும், (இதைக் கண்ட) பல தேவர்களும், ஜெய ஜெய என்று போற்றவும், கொதிக்கின்ற (கோபித்து எழும்) வேலாயுதத்தைச் செலுத்தினவனே!

அழகு கொண்டுள்ள கடப்ப மாலையை அணிந்தவனே! சரவணத்தில் உற்பவித்தவனே! வேலனே! வெற்றியைத் தருவதும், முழங்கி ஒலிப்பதும், நீல நிறம் உள்ளதுமான மயில் வீரனே!

திரு அண்ணாமலை, திருத்தணி, திருச்செங்கோடு, பழநிப்பதி, வலலக் கோட்டை இத்தலங்களில் வாழும் தலைவனே! திருவிடைக்கழி மேவும் பெருமானே!

(273) காபி 273 (9) (+) |4O திஸ்ர நடை

மருக் குலாவிய மலர் அணை கொதியாதே
வளர்த்த தாய் தமர் வசையது மொழியாதே
கருக் குலாவிய அயலவர் பழியாதே

கடப்ப மாலை இனி வர விட வேணும்
தருக் குலாவிய கொடி இடை மணவாளா
சமர்த்தனே, மணி மரகத மயில் வீரா
திருக்குரா அடி நிழல் தனில் உறைவோனே
திருக்கை வேல் வடி(வு) அழகிய பெருமானே

திருவீழிமிழலை 274

(274) அமிர்த வர்ஷணி (8) (−) ஆதி

எருவாய் கருவாய் தனிலே உருவாய்
இதுவே பயிராய் விளைவாகி
இவர் போய் அவராய், அவர் போய் இவராய்,
இதுவே தொடர்பாய் வெறிபோல

ஒரு தாய் இரு தாய் பல கோடிய தாய்
உடனே அவமாய் அழியாதே
ஒரு கால முருகா பரமா குமரா
உயிர் கா என ஓத அருள் தாராய்

நறுமணம் கமழும் மலர்ப்படுக்கை கொதித்துச் சுடு தராமலும்
வளர்த்த தாயும் சுற்றத்தாரும் வசைமொழிகளைப் பேசாமலும்
காரணத்துடன் நட்பாடின அயலார்கள் பழிச்சொல் கூறாமலும்
[நறுக்கு உவரவிய · புத்தி கூர்மை கொண்ட]
கடம்ப மலர் மாலையை இனி அனுப்பி வைக்க வேண்டுகின்றேன்
கற்பக விருக்ஷத்தின் கீழ் விளங்கிய கொடி போன்ற இடையை உடைய தேவசேனையின் மணவாளனே
சமர்த்தனே! மணிநிறம், மரகத நிறம் கொண்ட மயில் வீரனே!
திருக்குராமரத்தின் அடி நிழல் தன்னில் வீற்றிருப்பவனே!
திருக்கையில் வேல் ஏந்தின திருவுருவம் அழகுள்ள பெருமானே.

திருவீழிமிழலை 274

(274) உற்பத்திக்கு வேண்டிய எருவாய், கருப்பக் கருவாய்,
அதனின்றும் உருவம் ஏற்பட்டு இவ்வுயிரே பயிர் வளர்வது போல
விளைவதாகி - விளை பொருளாகி
இவர் இவர் என்று இன்று இருப்பவராய்ப் பின்பு (இறந்து பட்டு) அவர்
அவர் என்று சொல்லும்படியாகி, அவர் அவர் என்று சொல்லப்பட்டவர்
(பிறந்த பின்) இவர் இவர் என்று சொல்லும்படியாகி, இங்ஙனமே
ஒரு தொடர்ச்சியாய், வெறி பிடித்தது போல
ஒரு தாயர், இரண்டு தாயர், பல கோடிக்கணக்கான தாய்மார்களை
அடைந்தவனாய் வினைக நாண் அழிவுறாமல்
ஒரு முறையேனும் முருகா! பரமா! குமரா! எனது உயிரைக் காத்தருள்
என உன்னைக் கூவி ஓதுமாறு உனது திருவருளைத் தந்தருளுக (ஏனென்றால்)

முருகா என ஓர் தரம் ஓத அடியார்
  முடிமேல் இணைதாள் — அருள்வோனே

முநிவோர் அமரோர் முறையோ எனவே
  முது சூர் உரமேல் — விடும் வேலா
திருமால் பிரமா அறியாதவர் சீர்
  சிறுவா, திருமால் — மருகோனே
செழுமா மதில் சேர் அழகார் பொழில் சூழ்
  திரு வீழியில் வாழ் — பெருமானே

திருவெஞ்சமாககூடல் 275

(75) சுத்த தன்யாசி (7½) (ம) 4+1+2+3

வண்டு போற் சாரத்து — அருள்தேடி
  மநதி போற காவப் — பிணி சாடிச்

செண்டு போற பாசத் — துடன் ஆடி
  சிந்தை மாய்ந்தே சிதது — அருள்வாயே

தொண்டராற காணப் — பெறுவோனே
  துஙக வேறகாணதது — உறைவோனே
மிண்டராற காணக் — கிடையானே

வெஞ்சமாக கூடற் — பெருமானே

ருகா என ஒரே முறை ஓதுகின்ற அடியார்க்கு, நீ, அவர்கள் தலைமீது 73
உனது
து இரணடு திருவடிகளையும் வைத்து அருளவலாயிற்றே! (திருவடி
தீக்ஷை
ஷை செய்யும் கருணை வள்ளலாயிற்றே!)
மு
னிவர்கள், தேவர்கள் முறையோ என ஓலமிட, பழைய சூரனது மார்பின்
மேல்
ப் வேலாயுதத்தைச் செலுத்தினவனே!
தி
ருமாலும், பிரமனும் அறியமாட்டாதவராகிய சிவபெருமானுடைய சிறப்பு
வா
ய்ந்த குமாரனே! திருமாலின் மருகனே!
செ
ழிப்புள்ள அழகிய மதில் சூழ்ந்த அழகு நிறைந்த சோலைகள் சூழும்
திரு
வீழிமிழலை என்னும் திருத்தலத்தில் வாழ்கின்ற பெருமானே.

திருவெஞ்சமாக்கூடல் 275

வண்டு எவ்வாறு மலர்த்தேனை (சாரத்தை) நாடி பருகிக் களிக்கின்றதோ
அவ
வாறு, நான், உன் திருவருள் என்னும் தேனை நாடவும்
கு
ரங்கு எவவாறு மரக்கிளைகளைத் தாண்டித் திரிய வல்லதாயிருக்கின்றதோ, அவ்வாறு
நான
் காலன் பிணிப்பை- பாசத்தினால் கட்டுவதை- தாண்ட வல்லவனுமாறும
செண் -
டாயுதம் எவ்வாறு பகையை மாய்க்குமோ அவ்வாறு நான் பாசங்களுடன் போராடி [வெல்லுமாறும]
என்
மனதை நீ மாய்த்து- அழிய வைத்து- சும்மா இருக்கும் நிலையைத்
தந்து
து- மெய்யறிவை அருள்வாயே
அடியா
ர்கள் காண பெறுவோனே- அடியார்களுக்கு காட்சி அளிப்பவனே!
பரிசு
த்தமான திருவேற்காடு எனனும தலத்தில வீற்றிருப்பவனே!
மதங்
கொண்டவர்களால்- ஆணவம் மிக்கோர்களால் - காணக்கூடாதவனே-
மி
ண்டர்களின் புலனுக்கு அகப்படாதவனே!
வெஞ்
சமாக்கூடல் எனனும் தலத்தில வீற்றிருக்கும பெருமானே

---

(276) பெஹாக (7) (ப) 1300

சதுரத தரை நோக்கிய பூவொடு
கதிர் ஒத்திட ஆககிய கோளகை
தழைய்ச் சிவ பாக்கிய நாடக அநுபூதி

சரணக் கழல் காட்டி என ஆணவ
மலம் அற்றிட வாட்டிய ஆறு இரு
சயிலக்குலம் ஈட்டிய தோளொடு முகம் ஆறும்

கதிர் சுற்றுக நோக்கிய பாதமும்,
மயில்விற புறம நோககிய ஞானமென
கருணைக் கடல் காட்டிய கோலமும், அடியேனைக
கனகததினும நோககி இனிதாய், அடி
யவா முத்தமிழாற புகவே, பர
கதி பெற்றிட நோக்கிய பார்வையும் மறவேனே
சிதறத் தரை, நாற திசை பூதரம்
நெரியப, பறை மூர்க்கர்கள மாமுடி
சிதறக், கடல் ஆர்ப்பு உறவே, அயில் விடுவோனே

சதுர வடிவான, நான்கிதழ கொண்டதாய, தரையின் நான்கு திசைகளையும நோககியதாய் உள்ள பூவொடு (மூலாதார கமலம் முதல்) கதிரொத... முச்சுடர்களால் ஆன மண்டலங்கள் (அக்கினியாதி மும்மண்டலங்களை முறையில்) ஆறுதார நிலைகளெல்லாம - குளிர்ந்து தழைய சிவபேறதைத் தருவதான நாடக (அநுபூதி) பெறும பேறு ஆகிய (அல்லது) சதுர வடிவான மூலாதாரத்தினை நோககியுள்ள இதய கமலத்துடன் சூரிய நாடி பொருநது மாறு செய்யும், கோனகை தழைய - மண்டலிப்பாம்பு போல் உள்ள குண்டலி சக்தி ஜொலிக்கவும, ஆன்மாக்கள் சிவத்தைப பெறறு உயயவும நடிககின்ற அநுபூதி சரண் கழல காட்டி

+ திருவடிககழல அடியேனுக்குக் காட்டி, என்னுடைய ஆணவ மலம (யான் எனது என்னும் அகங்காரம்) தொலைந்து போம் வண்ணம் அதை (வாட்டிய) கெடுதது ஒழித்த உனது பன்னிரண்டு (குல சயிலம) சிறநத மலைகள் போல விளங்கும் தோளகளையும், ஆறு திருமுகங்களையும்

ஞான ஒளி சுற்றிலும் பரவி (ஆனமாக்களை) பாதுகாககின்ற திருவடியும் மயிலமேல் இருநது பாதுகாககின்றவனும் என வந்து (உனது) கருணைக கடலைக காட்டி அருளிய திருககோலத்தையும், அடியேனைப்

பெரானினும் இனிமையான பார்வையுடனே, அடியார்கள முத்தமிழ் கொண்டு பாடிக் (கதி) புகவும், அடியேன் மேலான நற்கதியைப் பெறவும், கடாகதிதுப் பார்த்த பார்வையையும் மறவேன்

(தரை சிதற) பூமி அதிர நாலு திசைகளிலுள்ள மலைகள் நெரிநது பொடி பட, பறையடிதது வந்த மூர்க்க அசுரர்களின் பெரிய முடிகள சிதறுண்டு விழ, கடல ஒலி செய்து வாயவிட வேலாயுதத்தை செலுத்தினவனே -

சிவபத்தினி, கூற்றினை மோதிய
    பதசத்தினி, மூத்த, விநாயகி.
    செகம் கிப்படி தோற்றிய பார்வதி   அருள் பாலா

விதுரற்கும், அராக்கொடியானையும,
    விகடத்து உறவாகதிய மாதவன்
    விசையற்கு உயர் தேர்ப்பரி ஊர்பவன்   மருகோனே

வெளி எட் திசை சூர் பொருதாடிய
    கொடி கைக் கொ6 கீர்த்தி உலாவிய
    விறல் மெயத் திருவேட்கள மேவிய   பெருமானே

---

(277) மலையம் (த) 277 (—) ஆதி

மாத்திரையாகிலும் நாததவருடன்
    வாழ்க்கையை நீடென   மதியாமல்
    மாக்களை யாரையும ஏற்றி6 சீவிகள்
    மாய்பரிவே எய்தி   அநுபோக

பாத்திரம் ஈதென மூட்டிடும் ஆசைகள்
    பாறு ப6 அடகம்   அது தேடப
    பார்க்கள மீதினில் மூர்க்கரையே, கவி
    பாறகடலான் என   உழல்வேனோ

சிவனது பத்தினியும், யமனை உதைத்த பாதங்களைக் கொண்ட சக்தி
வாய்ந்தவரும் (பராசக்தியும்), யாவர்க்கும் மூத்தவரும், தடைகளை நீக்குப
வரும் (அல்லது) தனக்கு மேல தலைமையில்லாதவரும், அண்டங்களை
இவ்வாறு சிருஷ்டித்தவருமாகிய பார்வதி தேவி அருளிய பாலனே!

விதுரனுக்கும், பாம்புக் கொடி கொண்ட துரியோதனனுக்கும், வேறுபாட்டு
-டன் கூடிய தொடர்பை (மனம் வேறுபட்ட உறவை) உண்டு பண்ணின
கண்ணபிரான், அர்ச்சுனனுடைய உயர்ந்த தேர்க்குதிரைகளைச்
செலுத்தினவன் ஆகிய திருமாலின் மருகனே!

வெளியிலே எட்டுத் திசைகளிலும் சூரனாய் நின்று சண்டை செய்து- சேவ
லாய் மாறி நின்ற- கொடியைக் கையிலேந்திய புகழ் விளங்க உலவின
பெருமானே! வெற்றியும் சத்தியமும் விளங்கும் திருவேட்களம் என்னும்
தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே!

277

(277)

ஒரு சிறிய அளவு கூட வாக்கு தவறாத மனைவியுடன் நடத்தும் இல்லற
வாழ்க்கையைப் பெரிதென மதிக்காமல்,

(அறிவு கெட்ட) பேர்வழிகள் யாராயிருந்தாலும் அவர்களை எல்லாம் ஏற்று அனுப
விக்கும் ஒழுக்கத்தை உடைய (பொது மாதர்களின் மீது) மிக்க அன்பைப்
பூண்டு (அவர்களை) அனுபவிக்கும்

பாத்திரம் இவன் என்று (பிறர் கூற), மூண்டு எழுகின்ற ஆசைகளிலே ஈடு
பட்டு, (ஆடகம்) பொன்- பொருள்- அதைத் தேட

பூமியிலுள்ள நீசர்களை (உலோபிகளையே), எனது பாடலில், பாற்கடலிற்
பள்ளி கொண்டிருக்கும் திருமாலே இவன் என்று புகழ்ந்து திரிவேனோ

சாத்திரம அறையும நீதத, மறை லய
சாத்தியர் மேவிய பதவேளே

'தாத்தரி தாகிட சேக்' எனு மா நட
தாட் பரனார் தரு குமரேசா
வேதத்திர சாலம் அது ஏந்திடு வேடுவர்
மீகக (அ)முதா மயில மணவாளா
வேத்தமதாம் மறை ஆர்த்திடு சீர், திரு
வேடகள மேவிய பெருமானே

திருவேறகாடு 278

(278) ஸிம் மேந்திர மத்யமம் (7) (~) 1300
கார்ச் சார் குழலார், விழியார அயில
ஆரப், பால் மொழியாரா, இடை நூல் எழு
வார், சார இளநீர் முலை மாதாகள் மயலாலே

காழ்க் காதலதா மனமே மிக
வார்க காமுகனுயுறு சாதக
மாப பாதகனும் அடியேனை நின அருளாலே
பார்ப்பாயலையோ அடியாரொடு
சேர்ப்பாயலையோ உனது ஆர அருள்
கூர்ப்பாயலையோ உமையாள் தரு குமரேசா

ஆறு சாஸ்திரங்களையும் கடந்து மனம் வயப்பட (மன வேகம்
அடங்கும்படி) வைத்த சாமர்த்தியம் உள்ளவர்கள் (மனோலயம்
சாத்தியம் ஆகும்படி செய்த பெரியோர்கள்) விரும்பிப் போற்றும்
திருவடிகளை உடைய வேளே!

'தாததரிதாகிட சேகு' என்று சிறந்த நடனம் செய்கின்ற திரு
வடிகளை உடைய சிவபெருமான் தந்த குமரேசனே.

அம்புக் கூட்டங்களைக் கொண்டு திரியும் வேடர்களின் மிக்க
அழகன்ன மயில் இயல் வள்ளியின் மணவாளனே

(வேத்தியமதாம்) அறியப்படுவதான வேதங்கள் ஒலி செய்யும்
சீரான திருவேட்களத்தில் வீற்றிருக்கும் பெருமானே.

திருவேற்காடு 278

(278) மேகத்தைச் (சாரந்த) ஒத்த கூந்தலை உடையவர்கள், கனகன
(ஆர) கூரிய (அயில்) வேல் போன்றவர்கள், பால போல் இனிய
மொழியை உடையவர்கள், இடையானது நூல் போல நுண்ணியதாகக்
கொண்டுள்ளவர்கள், பொருந்திய இளநீருக்கு ஒப்பான கொங்
கையை உடைய மாதர்கள் மீதுள்ள மோக மயக்கத்தாலே

திண்ணியதான (உறுதி கொண்ட) அன்பு பூண்டுள்ள மனமே மேல எழுச்சி
கொள்ள (வார) பெரிய காமுகனாயிருக்கின்ற ஜாதகத்தைக் கொண்ட
மகா பாதகனாகிய அடியேனை, உனது திருவருள் கொண்டு

பார்க்கமாட்டாயா! உனது அடியார்களொடு சேர்க்க மாட்டாயா!
உனது நிரம்பிய திருவருளை நிரம்பத் தரமாட்டாயா! உமையவள்
பெற்ற குமரேசனே!

பாரப் பாவலர் ஓது சொலால, முது
நீர்ப் பாரினில் மீறிய கீரனை
ஆர்ப்பாய், உனதாம் அருளால நர் சொல் அருள்வாயே

வாரமபேர் அருளே பொழிகாரண,
நேர்ப பாவ ச காரண மாமத
ஒற்பாடிகளே அழிவேயுற அறை கோப

வாக்கா, சிவ மா மதமே மிக
ஊக்காதிப, யோகம் அதே உறு
மாத்தா சிவபால குகா அடி யர்கள வாழ்வே
வேல் காட வல் வேடர்கள் மா மக
ளாக்கு ஆவ நன் மா மகிழ் திரு
வேற்காடு உறை வேதபுரீசுரர் தரு சேயே
வேட்டார் மகவான மகள் ஆனவளை
ஏடு ஆர திரு மா மணவா, மொழிய
நாட்டார பெரு வாழ்வெனவே வரு பெருமானே

திருவொற்றியூர் 279

(279) தந்யாஸி (5½) (ப) 3+½+1
சொரூப பிரகாச, விசுவரூப, பிரமாக, நிச
சுக, விபரி தேச, ரச சுப, மாயா

பூமியிலுள்ள புலவர்கள் ஓதும் புகழ்ச் சொல்லால், பழைய நீர் சூழ்ந்த
தீம பூமியில், மேம்பட்டு முதல தானத்துப் பூர்வமாக விளங்கும் நகரிரை
மகிழ்ந்து ஏறுபவனே! உன்னுடைய திருவருளைப் பாலித்து ஒரு உபதேசச்
சொல்லை (எனக்கு) உபதேசித்தருளுக.

உலகத்திற்கு நீடிய பேரருளையே பொழிந்த மூலகாரணனே! நேரிட்டு
எதிர்த்த, பாவத்துக்குத் துணைக்காரணமாகிய, சமண மதத்தை ஏற்பாடு
செய்த (பரப்பி வந்த) சமண குருக்களமார் எண்ணாயிரவர் அழிதலை அடைய
தேவாரப் பாடல்களைச் சொன்ன, கோபம் கொண்ட

திருவாக்கை உடையவனே! (ஞா) பெருமை வாய்ந்த சிவ மதமே பெருகும்படி
கைக்கு முயற்சிகளைச் செய்த தலைவனே! யோக நிலையில் இருக்கும் (மாதத்
பெரியவனே! சிவனது குமாரனே! குகனே! அடியார்களின் செல்வமே!
வேல் ஏந்திக் காட்டில் வசிக்கும் வலிய வேடர்களின் சிறந்த மகளாம் வள்ளி
யினை பால் அன்பு பூண்ட நல்ல அழகிய கணவனே! திருவேற்காடு என்னும் தலத்
தில் வீற்றிருக்கும் வேதபுரீசுரர் பெற்ற குழந்தையே!

வேள்வி நிரம்பிய மகபதி ஆகிய இந்திரனுடைய மகளாகிய தேவசேனை
யின், (ஏடு ஆர) மேன்மை நிறைந்த, அழகிய சிறந்த மணவாளனே! பொன்னு
லகத்தினரான தேவர்களுடைய பெருஞ் செல்வம் என வந்துள்ள பெருமானே

---

279 திருவொற்றியூர்

1) பிரகாச சொருபனே - ஒளி உருவமானவனே! சராசரங்கள் அனைத்தையும்
கொண்ட பேருருவனே! பிரமப (முழுமுதற்) பொருளாய நின்று, உண்மையான
சுகத்தைத் தருகின்றவனே! பிராமண தேஜசைக் கொண்டவனே! இன்ப சுபப்
பொருளே! (மாயா) அழியாத

ஆவியப் பிரகாச, மத சொலி அறற ரசாசவித
தொகை விகரம, மாதா வயிறு இடை உறு
கருவிற் பிறவாதபடி, உருவிற பிரமோத, அடி
கனா எதகிடு இராகவகை அதின் மீறிக
கருணைப் பிரகாச, உனது அருள் உற்றிட ஆசில், சிவ
கதிபெற்று, இடா ஆணைவயை மேவேனோ
குரு குக்குட வார கொடி, செரு உக்கிர ஆதப (அயில்)
பிடி கைத்தல, ஆதி அரி மருகோனே

குமரப், பிரதாப குக, சிவ சுப்பிரமாமணிய
குண முட்டர், அவா அசுரா குலகாலா

திரு, மேறி உற மருவு நகர் ஆற்றியூர் வாரித்திரை
அருகு உற்றிடும ஆதி சிவன் அருள் பாலா
திகழ் உற்றிடு யோக, தவ மிகு முக்திய மாதவர்கள
இதயத்து இடமே மருவு பெருமானே

திருவோத்தூர 280

(280) மோஹனம் (6) (ப) 01ப

தவா, வாள், தோமர, தலந் தரியாக காதிய தரும
தணியாச் சாகரம் ஏழும் திரி ஏழும்
சருகாக் காய கதிர் வேலும், பொரு காற சேவலும், நீலந்
தரி கூத்தாடிய மாவுந் தினை காவல்

சுத்த ஒளியே! மதங்களின் தொந்திரவைக் கடந்த இன்பம் கூடிய வகையதான பராக்ரமத்தை உடையவனே! மாதாக்களின் வயிற்றில் ஊறுகின்ற கருவில் பிறவாதபடி, (உனது) திருவுருவத்தில் (பிரேமை) விருப்பத்தக்க திருவடிகளை (ஏற்றிடு) துதி செய்கின்ற கீதவகைகளில் மேம்பட்டவனே கருணை ஒளியினனே! உன்னுடைய திருவருள் கூடுவதால், குறைவில்லாத சிவகதியை நான் பெற்றுத் துயரங்களான யாவற்றையும் கடக்கமாட்டேனோ

நிறமுள்ள (வார) உனது அன்புக்கு உகந்த (குக்குட) கோழிக் கொடியையும், போரில் உக்ரமாய் (அதவ) வெயில் ஒளி கொண்டதான வேலையும் பிடித்துள்ள திருக்கரங்களை உடையவனே! ஆதிமூலமாகிய திருமாலின் மருகனே குமரனே! கீர்த்தி விளங்கும் குகனே! (மா) அழகிய சிவசுப்பிரமணியனே குணம் (மூடு) குறைவுடையவரும் - தீயவர் - ஆசைமிக்கவருமான அசுரர் குலத்துக்குக் காலனே!

இலக்குமி சேர்ந்து பொருந்தியிருக்கும் நகருமான திருவொற்றியூரில் கடல் அலைக்கு சமீபத்திலிருக்கும் ஆதிசிவன் அருளிய குழந்தையே!

விளக்கம் கொண்ட யோகத்திலும், தவத்திலும் மிக்க விசேஷமடைந்த மகா தவசிகளின் நெஞ்சம் எனும் இடத்திலேயே பொருந்தி விளங்கும் பெருமாளே

---

*

திருவோத்தூர் 280

வில், வாள், தண்டாயுதம், சூலம் இவைகளை தரித்துக் கொலைகளை செய்த சூரனும், வற்றாத கடல்கள் ஏழும், மலைகள் ஏழும்

சருகு போல உலர்ந்து போகும்படி எரித்தழித்த ஒளி வேலும், சண்டை செய்ய வல்ல கால்களை உடைய சேவலும், நீலநிறம் கொண்ட நடனம் ஆட வல்ல மயிலாம் (மா) குதிரையும், தினபுனம் காத்த

துவர் வாய்க் கானவர் மானும், சுர நாட்டான் ஒரு தேனும் (4) 11
துணையாத தாழ்வு அற வாழும் பெரியோனே

துணையாய்க் காவல் செய்வாய என்று உணாப பாவிகள் பாவுந
தொலையாப் பாடலை யானும் புகல்வேனோ
பவம் மாய்த்து ஆண் அதுவாகும பனை காய்த்தே மணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும படி, வேதம்
படியாப் பாதகா, பாய் அன்றி உடா பேதைகள், கேசம்
பறி கோப்பாளிகள யாரும் கழுவேறச்

சிவமாய்த் தேன் அமுதாறும் திருவாசகால் ஓனி சேர், வெண்
திருநீறருல் அமர் ஆடும சிறியோனே,

செழு நீர சேய் நதி, ஆரம் கொழியாக் கோமளம் வீசுந்
திருவோத்தூர் தனில் மேவும் பெருமானே

திலதைபதி 281.

(281) ஜனரஞ்சனி (3) ஏ 13

இறை யதனோ அது தானும்
இலை இடடு உணல், எய தரு காலம்

அறையிற, பெரிதா. மல மாயை

பவளம் போன்ற வாயைக் கொண்ட வேடமானை வள்ளியும், தெய்வ 79
லோகத்தவளாகிய ஒப்பற்ற தேன் அனைய தேவசேனையும் துணையாகக்
கொண்டு குறைவு ஒன்றுமின்றி வாழ்கின்ற பெருமானே!

(நீ) துணையாகக் காவல் செய்து புரப்பாய் என்று உணராத பாவிகளிடத்
தே சென்று, அழிவிலாத அருமைப் பாடல்களை நானும் சொல்லுவேனோ!

பிறப்பை ஒழித்து, ஆறையிருந்த பனைமரம் காய்த்து, நறுமணம் வீசும் பழங்
களாயப் பூமியின் மீது விழும்படியாக — வேதத்தைப்

படிக்காத பாதகர்கள், பாய் அன்றி வேறு உடை அணியாத மூடர்கள், தலை
மயிரைப் பறித்துக் கொள்ளும் கூத்தாடிச் சமர்த்தர்கள் — அதிம சமணர்கள் -
யாவரும் கழுவில் ஏறும்படி

சிவமயமானதும், தேனும் அமுதும் ஊறினது போலத் தித்திக்கும், உனது
திருவாக்கினாலும் (பாடல்களாலும்), பெருமை வாய்ந்த வெள்ளைத் திருநீற்றினாலு
வாதுப் போர் புரிந்த இளையோனே!

செழுமை வாய்ந்த நீரைக் கொண்ட சேயாறு முத்துக்களைக் கொழித்து
அழகு வீசும் திருவோத்தூர் என்னும் தலத்தில் வாழ்கின்ற பெருமானே

திலதைப்பதி உ௬

81)

அறுப அளவு - அணு எவ்வளவோ அவ்வளவு கூட,
ஈதலை (ஒருவருக்கு) இட்டபின் நாம் உண்ணுதல் என்னும் அறநெறி என்னிடத்தில்
எய்தரு காலம்) இங்ஙன (பொருந்திய) வீணாகச் சென்ற காலம்
தொலைவப் புகின், மிகப் பெரிதாம் - எவ்வளவோ நீண்ட காலம் இங்ஙனம்
விட்டு உனதைக் கை விட்டேனா — மலத்திலும் மாயையிலும்

அலையப படுமாறு — இனி. ஆமோ
மறை அந்தண மா — சிறைச்சால
வழி உயத்(து) உயர் வான் — உறு தேவர்
சிறையைத் தவிரா — விடும் வேலா
திலதைப்பதிவாழ் — பெருமானே

தேவனூர் 282

(282) நாட்ட குறிஞ்சி (12) — ஆதி-திஸ்ர நடை

ஆறும் ஆறும், அஞ்சும் அஞ்சும். ஆறும் ஆறும் அஞ்சும் அஞ்சும
ஆறும் ஆறும அஞ்சும் அஞ்சும — அறு நாலும்
ஆறும் ஆய சகலங்கள, வேதா விளங்குகின்ற
ஆரண ஆகமங் கடந்த — கலையான

ஈறு கூற அரும் பெரும் சுவாமியாய இருந்த நன்றி
ஏது வேறு இயம்பல் இன்றி — ஒரு தாறைய

யாவுமாய் மனம் கடந்து மோன வீடு அடைந்து ஒருங்கி
யான் அவா அடங்க என்று — பெறுவேனோ

மாறு கூறி வந்து எதிர்ந்த சூரா சேனை மங்க வங்க
வாரிமேல் வெகுண்ட, சண்ட — வித, தாரை
வாகை வேல, கொன்றை தும்பை மாலை கூவிளங் கொழுந்து
வாள சோமன், நச்சு பொங்கு — பகுவாய

அலைச்சல் உறும் இத்தீநெறி இனிக் கூடாது என்றபடி-
வேதம் கற்ற தலைவன் பிரமனைப் பெரிய சிறைச்சாலைக்குப்
(போகும் வழியில் விட்டு) போம்படி வைத்து, உயர்ந்த வானத்தில் உள்ள
சிறையை நீக்கி விட்ட வேலனே! [தேவர்களின]
திலதைப்பதி என்னும் தலத்தில் வாழ்கின்ற பெருமாளே.

தேவாரா 282

(282) ஆறும் ஆறும் (பன்னிரண்டும்) அஞ்சும் அஞ்சும் (பத்தும்)
பன்னிரண்டும் பத்தும், பன்னிரண்டும் பத்தும்,
(அறு நாலும்) இருபத்து நான்கும் [12+10+12+10+12+10+24=90]
ஆறும் ஆய [90+6=96] தொண்ணூற்று ஆறு ஆன (துன்பங்களுக்குக்
காரணமான) தத்துவங்களுக்கும் வேறாக விளங்குகின்றதும், வேதம்
ஆகமம் இவைகளைக் கடந்ததும், உபதேச கலையாகிய
(ஈறு) சித்தாந்தமே சொல்லுதற்கு அரியதான பெரிய தெய்வ நிலையா
யிருந்ததுமான (நன்றி) நன்மைப் பொருளை (ஹேது) மூல காரணம்
வேறு சொல்லுதற்கு இல்லாமல்- தப்பற்ற தானாகவே நின்று.

எல்லாமாய் விளங்கி. மனங்கடந்ததான. மோன இன்ப வீட்டை
அடைந்து ஒடுங்கி- மனம் அருமைப்பட்டு ஒடுங்கி நான், எனது
ஆசைகளெல்லாம் அடங்குமபடியான (பாக்கிய நிலையை) என்று பெறுவேனோ
பகையைச் சொலவி வந்து எதிர்த்த சூரனுடைய சேனைகள் மங்கி அழிய,
கப்பல்கள் உலவும் கடலைக் கோபித்ததும், (சண்ட வித) விரைவு கோபம் வாய்ந்ததும
வெற்றி உடையதுமான வேலை ஏந்தினவனே! [கூர்மை கொண்டதும] கொன்றைத் தும்பை மாலைகள்
விலவக கொழுந்து, இளம் பிறை விழும் பொங்கி எழும் பிணப்பு வாயையுடையதும்

திருமாசுணம், கரந்தை, அறுகு, வேணி கொண்ட நம்பர
தேசிகா, கடம்ப அலங்கல் புனைவோனே

தேவர் யாவரும் திரண்டு பாரின் மீது வந்து இறைஞ்சு
தேவனூர் விளங்க வந்த பெருமானே

---

283 மாணட் (7½) ஒ 1½+2+4

காணொணாதது, உருவோடு அருவது,
பேசொணாதது, உரையே தருவது,
காணும் நான்மறை முடிவாய் நிறைவது, பஞ்சபூதக்

காய பாசம் அதனிலே உறைவது,
மாயமாய உடல் அறியா வகையது
காயமானவர் எதிரே அவர் என வந்து பேசிப்

பேணொணாதது, வெளி ஒய் ஒளியது
மாலனார் அயன் அறியா வகையது
பேத அபேதமொடு உலகாய் வளர்வது விந்து நாதப்

பேருமாய், கலை அறிவாய், துரிய அ
தீதமானது, வினையேன் முடி, தவ
பேறுமாய், அருள் நிறைவாய் விளைவது, ஒன்று நீயே

சீறிக் கோபிக்கும் (மாகணம்) பாம்பு, திருநீற்றுப்பச்சை, கங்கை கற்
இவைகளைச் சடையிற் கொண்ட பெருமான் சிவனுக்குத் (தேசிகா) குரு
மூர்த்தியே! கடப்ப மாலை அணிபவனே!
தேவர்கள யாவரும் ஒன்று கூடிப் பூமியிலே வந்து வணங்கும்
தேவனூரா விளங்க வந்த பெருமானே!

---

3) மன வாக்குக் காயங்களால் காண முடியாததும, உருவமும் அருவமும
கொண்டதும், இத்தன்மைத்து என்று பேசமுடியாததும, பலவித உரை விளக்க
ங்களுக்கும் இடம தருவதும் (அல்லது பேசும திறத்தைத் தருவதும்) காணப்படு
மந்த வேதங்களுக்கும் முடிவான பொருளாய நிறைந்து நிற்பதும், பஞ்ச
பூதங்களால் ஆய
இந்த உடல மீதுள்ள பாசத்திலே இருந்து விளங்குவதும், மாயா சம்பந்த
மான உடலால அறிய முடியாததும, காய சித்தி பெற்றவராலும் தம எதிரே
அவரைப் போல மனிதனாய வந்து பேசினாலும் - இன்னாரென அறிந்து
போற்ற முடியாததும, ஆகாய வெளியில் ஒளியாய நிற்பதும, (சிதாகாசத்
தில் ஜோதியாக விளங்குவதும) திருமால பிரமா இவர்களால அறிய
முடியாத வகையில் இருப்பதும, வேற்றுமை ஒற்றுமை எனப்படும தன்மை
கொண்ட உலகமாய வளர்வதும, பீடம, இலிங்கம எனப்படும
பெருடையதாகவும, கலை அறிவாயும (ஞானறிவாகவும்), துரியத்துக்கு
யோகியர் தம் மயமாய் நிற்கும உயர் நிலைக்கும) மேமபட்டதானதும்.
வினையேன்) வினைக்கு ஈடான எனனுடைய முடிந்த தவத்தின பெருக உள்ள
தாம், திருவருள் நிறைவாய விளைகின்றதும் - ஆக இந்த இலக்கணங்
களெல்லாம் பொருந்தியவன் நீ ஒருவனே!

வீணை உறுதி என அமையாத அசுரரை
நூறியே உயிர் நமன் நீ கொளு என,
வேல் கடாவிய கரனே, உமை முலை உண்ட கோவே

வேத நான்முக மறையோனொடும விளை
யாடியே குடுமியிலே கரமொடு
வீற மோதின மறவா, குறவர் குறிச்சியூடே
சேண் உறையிடம் இதண் மேல் அரிவையை
மேவியே மயல் கொளா வினைகள் செய்து
சேர நாடிய திருடா அருள்தரு கந்தவேளே

சேரொணாவகை வெளியே திரியு மெய்ஞ்
ஞான யோகிகள் உளமே உறை தரு
தேவனூர் வரு குமரா அமரர்கள் தம்பிரானே

(284) வலஜி (12) 284 (✓) ஆதி-திஸ்ர நடை
தாரகாசுரன் சரிந்து வீழ வேருடன் பறிந்து
சாதி பூதரம் குலுங்க முது மீன
சாகர உதையம் குழம்பி நீடு தீ கொளுந்த, அன்று
தாரை வேல் தொடும கடம்ப, மத தாரை
ஆரவார உம்பர் கும்ப வாரண அசலம் பொருந்து
மானையாளும, நிறை குன்ற மற மானும்

வீணான காரியம் (போர்புரிதல்) கூடாதென விலகி அடங்கி
யிராத அசுரர்களைப் பொடியாக்கி, அவர்கள் உயிரை, "யமனே! நீ கொள்
வாயாக" என்று கூறி வேலைச் செலுத்தின திருக்கரத்தனே! உமை
யின் முலைப்பாலை உண்ட அரசே!

வேதம் கற்றவனும், நான்கு முகத்தவனும் ஆன அந்தணன் பிரமனுடன்
பேசி விளையாடியே, அவன் குடுமியிலே திருக்கரத்தால் பலமாகக் குட்டின
வீரனே! குறவர்களின் மலை நிலத்து ஊராம் வள்ளிமலையில

மிகவும் உயரம் பொருந்தியுள்ளதாய்க் கட்டப்பட்டிருந்த பரணை
மீதிருந்த பெண் வள்ளியிடம் சென்று மயல் கொண்டுமபடியான
திருவிளையாடல்களைச் செய்து அவளுடன் அணைய விரும்பிய திருடனே!
(ஆன்ம கோடிகளுக்கு) அருள் புரிகின்ற கந்த வேளே!

யாரும் தம்மிடம் அணுக முடியாத வகையில் வெளியிலேயே திரிந்து
கொண்டிருக்கும் மெய்ஞ்ஞான யோகிகளின் உள்ளத்தே விளங்கி
வீற்றிருக்கும் தேவனூரில் எழுந்தருளியுள்ள குமரனே! தேவர்
கள் தம்பிரானே!

284

(284) தாரகாசுரன் நிலை பெயர்ந்து வீழ்ந்து மாள, வேரோடு கட்டவிழ்ந்து
குலமலைகள் (குலுங்க) நடுக்கம் கொள்ள, முற்றின மீன்களைக்
கொண்ட

(அம் ஓதை சாகரம் குழம்பி) அழகும் ஆரவாரமும் கொண்டுள்ள கடல் கலக்கமுற்று
பெருமதீயிற் பட, அன்று கூரிய வேலைச் செலுத்தின கம்பனே! மதநீர் ஒழுக்கையும்
ஆரவாரம் கொண்ட தேவலோகத்தில் உள்ள, (கும்ப) மத்தகத்தைக் கொண்ட (அசலம்)
மலை போன்ற (வாரண) யானை ஐராவதத்தின் மீது வீற்றிருந்த மான் போன்ற தேவ
சேனையும், தில் பெறு வள்ளிமலையில் இருந்த [illegible]

ஆசை கூரு நண்ப என்றும், மா மயூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேனோ

பார மாரா தரும்பர், செம்பொன் மேனியாளா, கங்கை வெண
கபால மாலை கொன்றை தும்பை சிறுதாளி

பார மாசுணங்கள் சிந்து வார, ஆரம், எனபு அடம்பு
பானல் கூவிளம் கரந்தை அறுகோடே

சேரவே மணந்த நம்பா ஈசனார் இடம் சிறந்த
சீதள அரவிந்த வசுகி பெருவாழ்வே

தேவர் யாவரும் திரண்டு பாரின் மீது வந்து இறைஞ்சு
தேவனூர் விளங்க வந்த பெருமானே.

நாகபட்டினம் 285

ஜோணபுரி (12) (1) ஆதி- திஸ்ர நடை

ஞாலமிட்டு உரைத்(து) எழுந்த வேலை வட்டம் இட்ட இந்த
ஊர் முகில தங்கள் ஒன்றும் அவர் ஆரென்று

ஊமரை பரசித்தார் என்றும், மூடரைச் சமர்த்தர் என்றும்
ஊனரை பரபுகழ்கள் என்றும் அறியாமல

கோல முத்தமிழ பரபந்தம் மாலருக்கு உரைத்து அநந்த
கோடி இச்சை செப்பி வம்பில் உழல நாயேன

(ஆக இருவரும்) ஆசை மிகவும் கொள்ளும் நண்பனே என்றும், சிறந்த
மி
வில் வாகனனே, கந்தனே என்றும், என ஆசை தீர என்று நான் மனம்
தூ
நமைப்படச் நின்று புகழ்வேன்!

;தவியின கொங்கைப் பாரத்தின் தழும்பு கொண்டவர், செம்பொன போன்ற
தி
ர மேனியை உடையவர். கங்கை, வெண்ணிறத்த கபாலமாலை, கொன்றை
து
ம்பை, சிறுதாளி (ஒரு வகை செடிப்பூ)
ப
ாரமான பாம்புகள், (சிந்து வாரம்) நொச்சி, (ஆரம்) கடம்பு, எலும்பு,
அட
ம்பு - ஒரு வகைக் கொடிப்பூ, (பானல்) கருங்குவளை, வில்வம் கரந்தை, அறுகு
டை
;சேர்ந்து விளங்கி மணக்கும் பெருமான் ஈசனார் ஆகிய சிவனது இடது
பாகத்
தத்திற சிறந்து விளங்கும், குளிர்ந்த தாமரையில் வீற்றிருக்கும்
டா
துப்பார்வதி தேவியின் பெருஞ் செல்வமே!

;தவர்கள் யாவரும் ஒன்று கூடிப் பூமியில் வந்து வணங்கும் தேவனூர்
ஊ
ர்னும் திருத்தலம் விளங்குமாறு எழுந்தருளியுள்ள பெருமானே

---

285 நாகபட்டினம்

5) சுவதமிட்டுப் பேரொலி செய்து திரை எழுகின்ற கடல் வட்டத்துக்குள் உ
இ
ப்பூமியில உள்ள) ஊர்களில் மேகம் போலக் கைம்மாறு கருதாது கொடுக்க
பிர
பூக்கள் ஒன்று. கற்பக விருக்ஷம் போலக் கேட்டதைக் கொடுக்கும
பிர
புக்கள், யார் உள்ளார்கள் என்று தேடிப் போய
பே
பசவும் வாய்வராத லோபிகளை மகா கீர்த்தி வாய்ந்த பிரபு என்றும், முட்டாள்
ச
த்தர் என்றும் குற்றம் குறை உள்ளவரை பிரபு என்றும் என்னுடைய அறிவினத்
தால
ழகிய முத்தமிழ் நூல்களை (உவந்து) ஆசை கொண்டு உழலும் லோபிகளிடம சொல்லி
நின்
ற்று எண்ணிலாத - கணக்குக் கடந்த - கோடிக் கணக்கான என் விருப்பங்களைத்
தொ
ஷித்து உழன்று திரிகின்ற அடியேன

(84)

கோபமற்று மற்றும் அந்த மோகமற்று உனைப் பணிந்து
கூடுதற்கு முத்தி என்று தருவாயே
வாலை, தூர்க்கை, சத்தி, அம்பி, லோக கர்த்தர் பித்தா பங்கில
மாது பெற்றெடுத்(து) உகந்த சிறியோனே

வாரி மொட்டெழ, க்ரவுஞ்சம் வீழ, நெட்(டு) அயிற துரந்த
வாகை மற்புய ப்ரசண்ட மயில் வீரா

ஞால வட்டம் முற்ற உண்டு நாக மெத்தையிற் துயின்ற
நாரணர்க்(கு) அருட் கரந்த மருகோனே
நாலு திக்கும் வெற்றி கொண்ட சூரபத்மனைக் கடிந்த
நாகபட்டினத்(து) அமர்ந்த பெருமாளே

(5) யமுனை கல்யாணி (8) 286 ஆதி
விழு தாது எனவே கருதாது உடலை
வினை சேர்வதுவே புரிதாக
விருதாவினிலே உலகாயதம், மே
விடவே மடவார் மயலாலே
அழுதா கெடவே அவமாகிட நாளை
அடைவே கழியாது உனை ஓதி
அவா தாளை அடியேன் உறவாய் மருவ ஞான
அழியா வரமே தருவாயே

கோபம் என்பதை ஒழித்து, பின்பு அந்த ஆசை என்பதையும் ஒழித்து உன்னைப் பணிந்து (உன் திருவடியைக்) கூடுதற்கு முத்தியை என்று தந்தருள்வாய்

என்றும் இளையாள், துர்க்கை, சத்தி, அம்பிகை, உலக கர்த்தர் ஆகிய பித்தராம் சிவபெருமானது இடது பாகத்திலே உள்ள தேவி, பெற்று எடுத்து மகிழ்ந்த சிறியோனே

கடல வற்றிப் போக, கிரவுஞ்சம் தூளாட்டு விழ, நெடிய வேலைச் செலுத்தி கின, வெற்றி பொருந்திய மற்போருக்குத் தக்கதான புயங்களை உடைய வலிமை வாய்ந்த மயில் வீரனே!

பூமி மண்டலம் முழுமையும் உண்டு, ஆதி சேடன் என்னும் பாம்பு மெத்தையில் துயில் கொண்ட நாராயணனுக்கு அருள் பாலித்த மருகனே

நான்கு திசைகளிலும் வெற்றி கொண்ட சூரபத்மனை அடக்கி ஒடுக்கி நாகபட்டினத்தில் வீற்றிருக்கும் பெருமானே.

விழுகின்ற (தாது) சுக்கிலம் என்று உடலைக் கருதாமல், வினையின் சேர்க்கையே - வினை பெருகுதலையே - விரும்புவதாய்

வீணாக, போகமே மோக்ஷம், எனும் புத்தி மேலிட்டதால், மாதர்களின் மயல் காரணத்தால் [உலகாயதம்: தேகமே ஆத்மா. போகமே மோக்ஷம் எனும் மதம்

(நான்) அழிதலும், ஐயோ கெட்டுப் போயும், (அவமாகி) வீணாக.

வாழ்நாள் முழுமையும் கழிந்து போகாமல் உன்னைப் புகழ்ந்து துதித்து மலருற்ற உன் திருவடியே அடியேனுக்கு உற்ற உறவாகக் கூடி வைக்கும் ஒப்பற்றதும் அழியாததுமான பதத்தைத் தந்தருள்வாயே!

தொழுதார் வினை வேற, அடியோடு அறவே
துகள் தீர் பரமே — தரு தேவா
சுரர் பூபதியே கருணாலயனே
சுகிர்தா அடியார் — பெருவாழ்வே
எழுதா மறை,மா முடிவே, வடிவேல
இறைவா எனை — ஆளுடையோனே
இறைவா எதுதா,அதுதா, தனியே
இணை நாகையில் வாழ் — பெருமானே

---

287 நிமயபுரம்

(287) ஹிமமேந்திர மத்யமம் (8) (ம) ஆதி

அஞ்சு வித பூதமும கரண(ம) நாலும
அந்தி பகல் யாதும் — அறியாத
அந்த(ம்) நடு ஆதி ஒன்றும் இலதான
அந்த ஒரு வீடு — பெறுமாறு
மஞ்சு தவழ் சாரல்,அம் சயில வேடர
மங்கை தனை நாடி — வனமீது
வந்த சரண அரவிந்தம் அது பாட
வண் தமிழ் விநோதம் — அருளாயே
குஞ்சர,கலாப,வஞ்சி,அபிராம
குங்கும பயோ — அதிரேக

தொழுகின்ற அடியார்களுடைய வினையின் வேர் அடியோடு அற்றுப்
போகக் குற்றமற்ற மேலாம் பதவியையே தருகின்ற தேவனே!
தேவர்களுக்கு அரசே! கருணைக்கு இருப்பிடமானவனே! (சுகிர்தா)
புண்ணியனே! அடியார்களுடைய பெருவாழ்வே!
(அழுத்தப்படாத) வேதத்தின் சிறந்த முடிவுப் பொருளே! கூரிய வேலை
ஏந்தும் இறைவனே! என்னை ஆட்கொண்டுள்ளவனே!
இறைவனே! நீ எதைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகின்றாயோ
அதைக் கொடுத்தருளுக (எனக்கு என்று ஒரு விருப்பம் வேண்டாம்)
(இணையே இன்றி) தனக்குத் தானே நிகரான நாகபட்டினத்தில் வாழும் பெருமாளே.

---

287 நிம்பபுரம்

(பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம் எனப்படும் பஞ்ச பூதங்களும்,
(மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படும்) கரணங்கள் நான்கும், இரவு
பகல் என்பனவாதி ஒன்றாலும் அறிய மாட்டாது விளங்குவதும்
(முடிவு, நடு, முதல் என்ற மூன்றில் ஒன்றேனும் இல்லாததான, அந்த
ஒப்பற்ற வீட்டின்பத்தைப் பெறுமாறு
மேகம் தவழ்கின்ற மலைப்பக்கங்களை உடைய, அழகிய மலையில் வசிக்கும்
வேடர்களின் மங்கை வள்ளியை விரும்பி, வள்ளிமலைக் காட்டில்
நடந்தருளிய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பாடுவதற்கு, (வண) தெளிவும்
(வினோதம்) அழகும் உடைய தமிழை அருள்வாயே
யானையினால் வளர்க்கப் பெற்றவரும், மயில் தோகையைப் போன்ற அழகிய
சாயலை உடையவரும், வஞ்சிக் கொடி போன்றவரும் ஆகிய தெய்வயானையுடைய
அழகிய செஞ்சாந்தும் சந்தனமும் (அதிரேக) மிகுதியாகக் கொண்டுள்ள

கும்ப தன மீது சென்று அணையு மார்ப
குன்று தடுமாற — இகல கோப

வெம் சமர சூரன நெஞ்சு பக, வீர
வென்றி வடிவேலை — விடுவோனே
விம்ப மதில் சூழ் நிம்பபுர வாண
விண்தல மகீபா — பெருமானே

பாகை 288

(288) ஹிந்தோளம் (16) (ஈ) ஆதி 2 களை

ஈளை சுரம குளிர வாதம எனும பல
நோய்கள் வளைந்து அற — இளையாதே,
ஈடு வடும் சிறு கூடு புகுந்து இடு
காடு பயின்று உயிர் — இழவாதே
மூளை எலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படும தழல் — முழுகாதே
மூலம் எனும் சிவயோக பதம் தனில்
வாழ்வு பெறும்படி — மொழிவாயே
வாளை நெருங்கிய வாவியிலும் கயல
சேலகள மறிந்திட — வலை பீறு
வாகை துதைந்த அணி கேதகை மங்கிட
மோதி வெகு வேகமொடு இள — மதி தோயும்

குடம் போன்ற தனங்களின் மீது (மனம்) சென்று அணைகின்ற மார்பனே! கிரௌஞ்சகிரி தருமாற்றம் அடையும்படி அதைப் பகைத்துக் கோபித்தவனே!

கொடிய போர் செய்த சூரனுடைய நெஞ்சு பிளவுபடவும், வீரம் வாய்ந்த வெற்றி அரும் கூரிய வேலைச் செலுத்தின வீரனே!

மணி பொருந்திய மதில் சூழ்ந்துள்ள நிம்பபுரம் என்னும் தலத்தில் வாழ்கின்ற, விண்ணுலகத் தரசர்களுக்கு - தேவேந்திரர்களுக்கு பெருமாளே

பாடல் 288

(288)

கோழை, சுரம், குளிர், வாயு முதலாகிய பிணிக்கூறு என்னும் பல நோய்கள் சூழ்ந்து மிக்க இளைப்பு அடையாமல்

வலிமையை இழந்து துன்புறும் சிறிய கூடாகிய இந்த உடலில் புகுந்து (ஈற்றில) சுடுகாட்டில் சேரும்படி உயிரை இழக்காமல்

மூளை எலும்புகள், நாடிகள், நரம்புகள் இவையெல்லாம் வேறுபட்டொழியத் தீயில் முழுகி வேகாமல்

மூலப் பொருளான சிவயோக பதவியில் (நான்) வாழ்வு பெறும்படி உபதேசித்தருளுவாயே!

வாளை மீனானது தனக்குச் சமீபத்தில் உள்ள குளத்தில் இருக்கின்ற கயல் மீன், சேல் மீன் இவைகள் முதுகிட்டு ஓட வலைகளைக் கிழித்துத் தாவி

வெற்றியே மிகுந்து, வரிசையாயிருந்த தாழைகள் உருக்குலைய, அவைகளின் மேல் மோதிக் கோபித்து, பிறைச் சந்திரனைப் படியும்

பானீ நறுங் கமழ் பூக வனந்தலை
சாடி நெடுங்கடல் கழி பாயும்
மாகை வளம்பதி மேவி வனம் செறி
தோகை விரும்பிய பெருமானே.

புனவாயில் 289

289 ரஞ்சனி (8) (-3/4) ஆதி

உரையும் சென்றது நாவும் உலர்ந்தது
விழியும் பஞ்சு போல் ஆனது கண்டு அயல்
உழலுஞ் சிந்துறு பால் கடை நின்றது கடை வாயால்
ஒழுகும் சஞ்சல மேனி குளிர்ந்தது
முறிமுனை கண்டு கை கால்கள் நிமிர்ந்தது
உடலும் தொந்தியும் ஓடி வடிந்தது பரிகாரி
வர, ஒன்றும் பலியாது இனி என்றுபின்
உறவும் பெண்டிரும் மோதி விழுந்து அழ
மறல் வந்து இங்கு எனது ஆவி கொளும் திமை இயல் தோகை
மயிலும், செங்கைகள் ஆறிரு திண்புய
வரை துன்றும் கடிமாலையும், இங்கித
வனமின், குஞ்சரி மாருடன் என்றன் முன் வருவாயே
அரி மைந்தனை புகழ் மாருதி என்றுள
கவியின சங்கம், இராகவ புங்கவன
அறிவுங் கண்டு அருள் வாயென அன்பொடு தர, வேறுன்

பாளைகளைக் கொண்ட நறுமணம் வீசும் கமுக மரக் காட்டில் அமமரங்களின் உச்சியிற் பாய்ந்து ஓடித்து பெரிய கடலின் கழியிற பாய்கின்ற பாளைக என்னும் செழும் பதியில் மேவி வளப்பம் நிறைந்த மயிலை (அவளது) வள்ளியம்மையை]-விரும்பிய பெருமானே.

புனவாயில் 289

(289)
பேச்சும் நின்று விட, நாவும் வறண்டு போய் விட, கண்களும் பசுசடைந்தன போல ஆகி விட, இவற்றைக் கண்டு வருத்தம் அடையும் உறவினர்கள் வாயிலே விட்ட பால உள்ளே இறங்காமல் தேங்கி நிற்க, கடை வாயிலிருந்து நீராய் ஒழுக. துயரம் மிகுந்த உடம்பு குளிர்ந்து போக, முடங்கிய கைகளும் கால்களும் யமனுடைய பாசக் கயிற்றை கண்டு நிமிர்ந்திட, பருத்த உடலும் தொந்தியும் இளைத்து வேகமாக வடிந்து போக, வைத்தியர் வந்து பார்த்து, இனிமேல் ஒரு வைத்தியமும் பலிக்காது என்று கூறின பின்பு சுற்றத்தாரும் பெண்களும் உடலின் மீது விழுந்து மூடிக் கொண்டு அழ, யமன் இங்கு வந்து என் உயிரைக் கொண்டு போகின்ற நாளில், அழகிய தோகை மயிலும், பன்னிரு செங்கைகளும், பன்னிரு வலிய தோள்களாம் குன்று களிலே தவழும் வாசமிகு கடப்ப மாலையும், பண்பு மிகுந்த காட்டு மின்னல் போன்ற வள்ளி, தேவயானை ஆகியோருடன் என முன்னால் நீ வர வேண்டும்.

சூரியனின் மைந்தனான சுக்ரீவன், புகழ் மிக்க வானர மந்திரியாகிய மாருதியினிடத்தில், "இராகவனாகிய மரவுரி தரித்தவனது அறிவின் திறத்தைக் கண்டு அருள்வாய்" என்று அன்பொடு அனுப்ப

அருளுங் கண்ட தராபதி வன்புறு
விஜயம் கொண்டு எழு போது புலம்பிய
அகமும் பைந்தொடி சீதை மறைந்திட — வழிதோறும்

மருவும் குண்டலம் ஆழி சிலம்புகள்
கடகம் தண்டை பொன் நூபுர மஞ்சரி
மணியின் பந்தெறி வாயிது வந்தென, — முதலான

மலையுஞ் சங்கிலி போல மருங்கு, விண்
முழுதுங் கண்ட நாராயணன அன்புறு
மருகன், தென்புன வாயில் அமர்ந்தருள் பெருமானே.

பெருங்குடி 290

(290) ஸாரமதி (2½) (த) 1+½

தலங்களில வருமம கனகி(ல)லம கொடு மடநதையர்
தழைந்த உதரம திகழ் — தச மாதக
சமைந்தனர் பிறநதனா கிடந்தனர் இருநதனா
தவழ்ந்தனர் நடந்தனா — சிவகாலம்

துலங்கு நவ பெண்களை முயங்கினா, மயங்கினர்,
தொடும் தொழிலுடன தம — கரக பாரக

அநுமன ராமனின் அருகே கண்டு, மேலும் கூறினை 'அந்த அண்டத்து அதிபதி (இராவணன்) வலுக்கட்டாயமாக (சீதையை அபகரித்து) வானில புஷ்பக விமானத்தில கொண்டு செல்லும் போது, மனம் வருந்திப் புலம்பிய பசுங்கொடி போன்ற சீதையும மறைவாக, சென்ற வழியின் எல்லாம் தான் அணிந்திருந்த நகைகளாகிய குண்டலம், வளைகள், சிலம்புகள், கொலுசு, பொன் சதங்கை, மாலைகள, மணிகள் ஆகிய வற்றைப் பந்து போல் வீசி எறிந்தாள், அந்த நகை முட்டை இதுதான் என்று தந்திட, மூதண்மையான

மேருமலை அளவுக்கு உயர்ந்து, பக்கத்தில் தொடராக உள்ள வானம் அனைத்தையும் (திரிவிக்ரமாவதாரத்தில்) பாதத்தால் அளந்த நாராயணனும் திருமால் மிகவும் அன்பு கொண்ட மருமனும், தென் திசையில் உள்ள புனவாயில் என்ற தலத்தில் அமர்ந்து அருள் பாலிக்கும் பெருமானே.

பெருங்குடி 290.

(290) பூமியில உள்ள இடங்களில் இருக்கின்ற பெரிய வீட்டில் இருந்து கொண்டு, மாதர்களின் பூரிதத்துள்ள வயிற்றிலே செம்மையாகப் பத்து மாதம்

வளர இருந்தனர் (பின்னர்) பிறந்தனர், படுக்கையிற் குழந்தையாய்க் கிடந்தனர், உட்கார்ந்தனர், அதன பின தவழ்ந்து சென்றனர், (அதன பின்னர்) நடககலுற்றுர, பின்பு சில காலம்

விளககமுள்ள நல்ல பெண்களோடு பொருந்தி இருந்தனர், அவர் மீது மோக பயதகம கொண்டனர, அவர்களைத் தொட்டுத தழுவும தொழிலுடனே, தமது இல்லற வாழ்க்கைப் பாரத்தை

சுமந்தனா அமைந்தனா குறைந்தனா இறந்தனா
கடும்பிணி எனும் பவம் ஒழியேனோ

இலங்கையில் இலங்கிய இலங்கரை இலங்கு அருள்
இல் எங்கணும் இலங்கு என முறை ஓதி

இமம் கலை குரங்கொடு நெடுங்கடல் நடுங்கிட
எழுந்தருள் முகுந்தன் நன் மருகோனே
வேலம் கொடு விலங்கலும் நலங்க, அயில் கொண்டு ஏறி
ப்ரசண்ட கர தண தமிழ வயலூரா
பெரும் பொழில கரும்புகள் அரம்பைகள நிரம்பிய
பெருங்குடி மருங்கு உறை பெருமாளே

பேரூர் 291

71) சாருகேசி (4-½) ப 3+½

தீராப் பிணி தீர சீவாத்தும ஞான
ஊனா ஆட்சியதான தா வாக அருளாயே

பாரோர்க்கு இறை சேயே பாவாக கிரி ராசே

பேராற் பெரியோனே பேரூர் பெருமாளே

சுமந்தனர், அவ்வாழ்க்கையிலே உடன்பட்டு இருந்தனர், பின்பு தமது
தொழில், பொலிவு. வலிமை இவையெலாம் குறைந்து மங்கி இருந்தனர்;
(ஈற்றில்) இறந்தனர், (இப்பிணத்தை) சுட்டெரியுங்கள் இனி,
என்றெல்லாம் சொல்லப்படுகின்ற இப்பிறப்பை ஒழிக்க மாட்டேனோ-
இலங்கை நகரில் விளக்கமுற்றிருந்த வீடுகளும் விளக்கமுற்ற அருள்
தயை, அன்பு) இல்லா எல்லா இடத்தும் ஏ! அக்கினியே! நீ பற்றி
எரிவாயாக என்று கட்டளையிட்டு (அலலது) நீதியை எடுத்துரைத்து,
கனல் இடும்- நெருப்பை வைத்த குரங்கு அநுமனோடு, பெரிய கடலும்
நடுக்கம் கொள்ள எழுந்தருளின ராமபிரானது நல்ல மருகனே!
பலத்துடனே கிரவுஞ்சகிரி அசைவு உற வேல் கொண்டு எறிந்த மிக்க
வீரம் கொண்டவனே! தண்ணிய தமிழ் விளங்கும் வயலூரில் வசிப்பவனே!
பெரிய சோலைகளில் கரும்புகளும் வாழைகளும் நிரம்பி விளங்கும்
பெருங்குடி எனும் தலத்துக்கு அங்கே வாழ்கின்ற பெருமானே!

வேரூர் 291

91) முடிவே இல்லாத (பிறவிப்) பிணி முடிவு பெற, சீவனாகிய ஆத்துமா
வைப் பற்றிய இந்தச் சிற்றுயிர்க்கு உற்ற ஞான நிலையைத் தருவதும்,
உலக முழுவதையும் ஆட்சி செய்யக்கூடியதுமான - ஓர் உவமையற்ற உபதேச
மொழி யொன்றை (எனக்கு) உபதேசித்தருள்க
உலகோர்க்கு தலைவனே சிவனது குமாரனே! என்றும் குழந்தையாய்
இருப்பவனே! மலையரசே (குறிஞ்சி வேந்தே)
புகழில் எவரினும் மேம்பட்ட பெரியவனே! வேரூர் எனும் தலத்தில்
எழுந்தருளியிருக்கும் பெருமானே